வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஁ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 11.01.2025 சனிக்கிழமை இதழ் : 11 பக்கங்கள் : 12




# வடக்கு அரிசிஆலை உரிமையாளர்களுக்கு நெல் கொள்வனவுக்கு கடன் வழங்குங்கள்!

## வங்கி முகாமையாளர்களிடம் கோரினார் ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜனவரி 11

நெல் கொள்வனவு செய்வதற்கு போதிய களஞ்சிய வசதிகள் இருந்தபோதும் அதற்குரிய கடன் வசதிகளை வங்கிகள் வழங்கவில்லை என அரிசி ஆலை உரிமையாளர்கள் கலந்துரையாடலில் தெரிவித்தனர் எனக் குறிப்பிட்ட வடக்கு மாகாண ஆளுநர் என்.வேதநாயகன், எங்களுடைய மாகாணத்தில் விளையும் நெல் வேறு மாகாணங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு அதிகரித்த விலையில் மீண்டும் எமது மாகாணத்துக்கு கொண்டு வரப்படுகின்றமையை தவிர்ப்



பதற்காக எமது அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அதற்குரிய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும் என வங்கிகளின் முகாமையாளர்களிடம் கோரியுள்ளார்.

11

## யாழில் பொலிஸார் என கூறி 50 ஆயிரம் ரூபாய் வழிப்பறி!

### கோப்பாய் பொலிஸ் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணத்தில் பொலிஸார் எனக் கூறி 50 ஆயிரம் ரூபாயை வழிப்பறி செய்த கொள்ளையர்கள் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கோண்டாவில் பழனியாண்டவர் ஆலயத்துக்கு அருகில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை நின்ற இருவர் வீதியில் வந்த நபரை வழிமறித்து ,தம்மை பொலிஸார் என கூறி அவரது உடைமைகளைச் சோதனையிட்டுள்ளனர்.

அதன்போது அவரது உடைமையில்

11

## தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் 18ஆம் திகதி தேசிய தைப்பொங்கல்விழா!

யாழ்ப்பாணம், ஜன. 11

தேசிய தைப்பொங்கல் பண்டிகை யாழ்ப்பாணம் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது.

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ்ப்பாண மாவட்ட செயலகம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்

இணைந்து 2025ஆம் ஆண்டுக்கான தேசிய தைப்பொங்கல் பண்டிகையை ஏற்பாடு செய்துள்ளன.

அதன்படி புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவியின் தலைமையில் காலை 7.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் சமய வழிபாடுகளுடன் ஆரம்பமாகி பின்னர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வரை ஆன்மிக விழிப்புணர்வு நடைபயணமும் அதனைத் தொடர்ந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(அ)


## ரோஹிங்கியா அகதிகள் கடத்தலின் பின்னணியில் உள்ள இலங்கையர்!

### தீவிர விசாரணைகளை ஆரம்பித்தது அரசு

கொழும்பு, ஜனவரி 11

இலங்கைக்கு மேலும் ஒரு லட்சம் ரோஹிங்கியர்கள் அகதிகளாக வரக்கூடும் என்ற உள வுத்துறை தகவல்களை தொடர்ந்து இந்த மனித கடத்தல் மோசடிக்குப் பின்னால் இலங்கையர் யாராவது ஈடுபட்டுள்ளாரா என்பதை அறிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து பொலிஸார் விசாரணைகளைத்

11



## தேசியப் பட்டியல் ஆசனம் வழங்க வர்த்தகரிடம் ரூபா 50 கோடி பணம்!

### இரு பிரதான எதிர்க்கட்சிகள் மறுப்பு

கொழும்பு, ஜன. 11

தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவி வழங்குவதாகக் கூறி கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரிடம் இருந்து 50 கோடி ரூபா பணம் பெற்றதாக வெளியான செய்தியை மறுப்பதாக, இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் தெரிவித்துள்ளன.

தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவியை வழங்குவதற்காக கோடீஸ்வர வர்த்தகரிடம் இருந்து இந்தத் தொகை பெறப்பட்டதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

11

## நாட்டில் அதிகரித்துவரும் இன்புளூவன்ஸா தொற்று

### மருத்துவ உதவியை நாடுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, ஜன. 11

காய்ச்சல், இருமல் அல்லது சளி போன்ற நோய் அறிகுறிகள் காணப்பட்டால், பொதுமக்கள் விழிப்புடன் செயற்படவேண்டுமெனவும் மருத்துவ உதவியை உடன் நாடுமாறும் சுகாதார நிபுணர்கள் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில், பருவகாலக் காய்ச்சல் மீண்டும் அதிகரித்து வரும் நிலையில்,

11

## என்னை கட்சியிலிருந்து நீக்க பொதுச் சபைக்கே அதிகாரம்!

### சிவமோகன் காட்டம்

வவுனியா, ஜன. 11

தமிழரசுக் கட்சியில் இருந்து என்னை நீக்கும் அதிகாரம் பொதுச் சபைக்கு மாத்திரமே உள்ளது. அதனை மீறினால் செயலாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வேன் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

11

## தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையின் 51ஆம் ஆண்டு நினைவு யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், ஜன. 11

உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 51ஆம் ஆண்டு நினைவு தினம், யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வு நேற்று காலை 9:30 மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் இடம்பெற்றது.

கடந்த 1974ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி

11

இலங்கையர்கள் உட்பட பல நாடுகளை சேர்ந்த

## புகலிடக் கோரிக்கையாளர்களின் உரிமையை மீறிய ஆஸ்திரேலியா!

கொழும்பு, ஜன. 11

இலங்கை உட்பட ஏனைய பல நாடுகளை சேர்ந்த புகலிடக்கோரிக்கையாளர்களை

ஆஸ்திரேலிய அரசாங்கம் தன்னிச்சையாக நவ்று தீவு தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்திருந்ததன் மூலம் அவர்களின் மனித உரிமைகளை மீறியுள்ளது என ஐ.நா. தெரிவித்துள்ளது.

நவ்றுவில் புகலிடக்கோரிக்கையாளர்களை தடுத்து வைத்திருந்ததன் மூலம் ஆஸ்திரேலியா அவர்களின்

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலால்தான் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டது என்பதை ஏற்கமுடியாது!

## கூறுகிறார் வஜிர அபேவர்தன

கொழும்பு, ஜன. 11

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரிசியை இலவசமாக வழங்கியதால்தான் தற்போது அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறும் குற்றச்சாட்டை எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது. அனுபவமின்மை மற்றும் முகாமைத்துவம் செய்வதில் உள்ள குறைப்பாடுகளே இதற்கு பிரதான காரணம் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.**



ஜனாதிபதித் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரிசியை இலவசமாக வழங்கியதால் தான் தற்போது சிவப்பு அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்நிலையில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த விடயம் தொடர்பில் கட்சியின் தவிசாளர் தெளிவுப்படுத்தி இருந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரிசியை இலவசமாக வழங்கியதால் தான் தற்போது சிவப்பு அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறும் குற்றச்சாட்டை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

அதனை நாம் முற்றாக நிராகரிக்கிறோம். இந்த நாட்டில் உள்ள மக்களுக்கு ஒருநாளுக்கு தேவையான அரிசியின் அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே அதனை பணம் கொடுத்தோ அல்லது இலவசமாக வழங்கினாலுமோ தட்டுப்பாடு ஏற்படாது. இதனை நாம் அனுபவம் அற்ற தன்மை எனக் கூறுகிறோம்.

2021 மற்றும் 2021 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் விவசாயிகள் விவசாய நிலங்களில் இருக்கவில்லை. பயிர்ச்செய்கை மேற்கொள்ளாமல் உரமின்றி மண்வெட்டிகளுடன் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை மேற்கொண்டிருந்தனர். அப்போது விவசாய நிலங்கள் வெறுமையாகவே இருந்தன.

அந்த இக்கட்டான காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைப் பொறுப்பேற்று விவசாயிகளுக்கு தேவையான நிவாரணங்களை வழங்கி போதுமான உரத்தையும் பெற்றுக்கொடுத்து அவர்களை விவசாய நிலங்களுக்கு அனுப்பி விவசாயத்தில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுத்தார்- என்றார்.

# இந்தியாவிலிருந்து சிவப்பு பச்சை அரிசி தருவிக்கும் முயற்சி தோல்வி

கொழும்பு, ஜன. 11

இந்தியாவில் சிவப்பு பச்சை அரிசி கிடைக்காததால், அங்கிருந்து அரிசியை இறக்குமதி செய்வதற்கான முயற்சிகள் தோல்வியடைந்ததாக வர்த்தக விவகார, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

உள்ளூர் சந்தையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை சமாளிக்க சிவப்பு பச்சை அரிசியை இறக்குமதி செய்ய இந்திய தூதரகம் மற்றும் இந்திய விநியோகஸ்தர்களுடன் அரசாங்கம் கலந்துரையாடியதாக அவர் கூறினார்.

எனினும் அந்த முயற்சி தோல்வியடைந்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள ஆலைகளிலும் சிவப்பு பச்சை அரிசி கிடைக்கவில்லை என அவர் கூறினார்.

எனினும் நிலைமையை எப்படியாவது சமாளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார். (அ)

# பெண்ணின் சடலம் காயங்களுடன் மீட்பு!

மதவாச்சி, ஜன.11

மதவாச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுவெல மயானத்துக்கு அருகிலுள்ள குழியில் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 30 முதல் 40 வயதுக்குட்பட்டவர். இருப்பினும், அவரது சடலம் இன்னும் அடையாளப்படுத்தப்படவில்லை. பெண்ணின் சடலம் அருகில் இருந்த பையில் கொழும்பில் இருந்து மதவாச்சிக்கு இ. போ. ச. பேருந்தில் பயணித்த பற்றுச்சீட்டு ஒன்று மீட்கப்பட்டது.

பெண்ணின் உடலில் பல காயங்கள் காணப்பட்ட நிலையில், இதுவொரு கொலையென பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிவானின் விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக சடலம் அநுராதபுரம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. (எ-10)

# பருத்தித்துறை நகர சபையின் புதிய சந்தைக் கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11

பருத்தித்துறை நகர சபையின் புதிய சந்தைக் கட்டடத் தொகுதி வடக்கு மாகாண ஆளுநர் என்.வேதநாயகனால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

தேசிய கொடி ஏற்றப்பட்டு சந்தை கட்டடத் தொகுதியின் புதிய கட்டடம் ஆளுநரால் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கட்டடம் தை திருநாளில் முதற்கிழமையில் மரக்கறிச் சந்தை வியாபாரிகளுக்காக கையளிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

இதன்போது உரையாற்றிய ஆளுநர், மக்கள் நம்பிக்கை வைக்கும் ஒரு நிர்வாகம் தற்போது கிளீன் சிறிலங்கா எனும் தொனிப் பொருளில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அரச சேவைகளைப் பெறுகின்றபோது தெரிந்த ஒருவரைக் கூட்டிச் செல்லவேண்டிய சூழல் கடந்த காலங்களில் காணப்பட்டது.

2025 ஆம் ஆண்டு மக்கள் தமது சேவைகளை தங்கு தடையின்றி பெற்றுக்கொள்ளும் வகையிலான ஆண்டாக அமையவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், பருத்தித்துறை பிரதேச செயலர், நகர சபையின் தலைவர், செயலாளர், வியாபாரிகள் பொது மக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ-02-05)

# ஆஸியில் இலங்கையர் ஒருவர் நாட்டைவிட்டு வெளியேறத் தடை

கொழும்பு, ஜன. 11

சர்வதேச விமானத்தில் பெண் ஒருவரை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட ஒருவரின் வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது, அவர் ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளது.

41 வயதான அசங்க மத்யூ பொடியப்பு ஹாமிலகே, ஒரு மொழிபெயர்ப்பாளருடனும் இரண்டு ஆதரவாளர்களுடனும் மெல்போர்ன் நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியா செல்லும் விமானத்தில் மற்றொரு பயணி அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, கடந்த டிசெம்பர் 18ஆம் திகதி மெல்போர்ன் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட பின்னர் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

பொடியப்புஹாமிலகே விமானப் பயணத்தின் போது அநாகரீகமான செயலைச் செய்ததாக பொலிஸார் குற்றம் சாட்டுகின்றனர். குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவருக்கு ஏழு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

சம்பவம் நடந்த மறுநாளே அவர் முதலில் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த நிலையில், அவருக்கு கடுமையான நிபந்தனைகளின் கீழ் பிணை வழங்கப்பட்டிருந்தது. அவரது கடவுச்சீட்டை ஒப்படைத்தல், மாநில எல்லைக்குள் தங்குதல், வாரத்திற்கு மூன்று முறை பொலிஸாரிடம் அறிக்கைச் செய்தல் மற்றும் வீட்டு ஊரடங்கு உத்தரவைப் பின்பற்றுதல் ஆகியவை இதில் அடங்கும்.

நீதிமன்றத்தில், அவரது சட்டத்தரணி, க்ளென் வேவர்லியில் தனியாக வாழ அனுமதிக்க அவரது பிணை நிபந்தனைகளில் மாற்றம் கோரினார் ஜனவரி 30 ஆம் திகதிக்குள் சிசிரிவி காட்சிகள் உள்ளிட்ட ஆதாரங்களை அவரது வாதத்துக்கு பொலிஸார் வழங்குவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய நிர்மாணப் பணியை துரிதமாக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 11

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்த துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளதாக துறைமுகங்கள், விமான சேவைகள் பிரதியமைச்சர் ருவன் கொடிதுவக்கு தெரிவித்தார்.

இதனிடையே, அதானி நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் மேற்கு முனைய அபிவிருத்தி பணிகளை அடுத்த மாதத்துக்குள் நிறைவு செய்ய முடியுமெனவும் அவர் கூறினார்.

இந்த இரு முனையங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்தவுடன் கொழும்பு துறைமுகத்தின் வருடாந்த கொள்கலன் நடவடிக்கை கொள்ளளவு 8 மில்லியனிலிருந்து 13 மில்லியனாக அதிகரிக்குமென துறைமுகங்கள், விமான சேவைகள் பிரதியமைச்சர் ருவன் கொடிதுவக்கு குறிப்பிட்டார்.

இது நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கும் சர்வதேச சந்தைக்கும் வலுவான பிரவேசமாக அமையுமென அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# துமிந்த சில்வாவுக்கு விடுதலை கிடையாது!

## அடித்துக் கூறுகிறது அநுர அரசு

கொழும்பு, ஜன. 11

2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவிற்கு ஒருபோதும் ஜனாதிபதி பொது மன்னிப்பு அளிக்கமாட்டார் என பிரதி நீதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் உரையாற்றிய பிரதி நீதியமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு நாங்கள் பயப்படமாட்டோம். அவருக்கு சார்பான தொலைக்காட்சி ஊடகங்கள் அவருக்கு சார்பாக செய்திகளை வெளியிட்டாலும் பொதுமன்னிப்பு வழங்கப்படமாட்டாது.

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இருக்கிறது. துமிந்த சில்வாவுக்கு தொடர்ந்தும் மருத்துவ சிகிச்சை வேண்டுமா என்பதை அறிய மருத்துவ மதிப்பீடுகள் நடைபெற்று வருகின்றன - என்றார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவுக்கு 2021 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய வழங்கிய சர்ச்சைக்குரிய பொது மன்னிப்பை உயர் நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டதையடுத்து அவர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 90 வகையான மருந்துகளின் விலையை குறைக்க முடிவு!

கொழும்பு, ஜன. 11

90 வகையான மருந்துகளின் விலைகளை குறைப்பதற்கு ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை திட்டமிட்டுள்ளது.

இதற்காக சில மருந்து நிறுவனங்கள் மாவட்ட நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கிற்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதற்கமைய நகர்த்தல் பத்திரம் ஊடாக விடயங்களை முன்வைக்கவுள்ளதாக அவர் கூறினார்.

அதன் பின்னர் மருந்துகளின் விலைகளை குறைக்கும் நடவடிக்கையை விரைவில் முன்னெடுக்கவுள்ளதாக ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் உயரதிகாரி தெரிவித்தார். (அ)

# கடமைகளை ஏற்றார் தலதா அத்துக்கோரள

கொழும்பு, ஜன. 11

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள நேற்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் கடமைகளைப் பொறுப்பேற்றார். முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தலதா அத்துக்கோரளவை இந்தப் பதவிக்கு நியமித்தார். இந்தப் பதவியை முன்னதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார வகித்திருந்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
11.01.2025 சனிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரூடோவின் பதவி விலகல்

கனடிய பிரதமர் ரூடோ கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து வெளியேறும் அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார். கடந்த ஒன்பது ஆண்டுகளாக பதவியில் இருந்த ரூடோ, அவரது அரசியல் அணுகுமுறைகளில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து ஆளும் தாராளவாத கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகுவதாக அறிவித்திருக்கின்றார். தான் கட்சிக்குள் உட்சண்டையை எதிர்கொண்டிருப்பதால், தேர்தலில் தன்னால் ஒரு சிறந்த தெரிவாக இருக்க முடியாதென்று குறிப்பிட்டிருக்கின்றார்.

அண்மைக்காலமாக ரூடோவின் செயல்பாடுகளால் அவர் தொடர்பில் கட்சிக்குள் அவநம்பிக்கையும் அதிருப்தியும் அதிகரித்திருந்தது. உள்ளுக்குள் மட்டுமல்ல அவரது கருத்துக்களால் சர்வதேச உறவுகளிலும் விரிசல்கள் ஏற்பட்டன. தனது உள்ளூர் தேர்தல் நலன்களுக்காக வெளியுலக உறவுகளை பகைத்துக் கொள்வதில் தயக்கமற்ற ஒருவராகவே அவர் இருந்தார். சிறுபான்மை அரசாங்கமாக இருந்ததால் சீக்கிய அரசியல் சமூகத்தின் தாளங்களுக்கு ஆடவேண்டிய நிலையில் இருந்தார். கனடிய சீக்கிய சமூகத்தின் ஆதரவு தேவை என்பதற்காகவே எவ்வித தயக்கமுமின்றி இந்தியாவின் இராஜதந்திர உறவை முறித்தார். ஆனால், இதே ரூடோ கியூபெக் தேசியவாத அலை எழுந்த காலத்தில் அதனை கடுமையாக விமர்சித்தவர். அரசியல் தேசியவாதம் என்பது 19ஆம் நூற்றாண்டின் சிந்தனை என்று கூறி எதிர்த்தவர் ஆனால் பின்னர் பதவிக்காக புலிக்கொடியோடு நிற்பவர்களோடும் படம் பிடித்தார், சீக்கிய தீவிரவாத குழுக்களோடும் படம் எடுத்தார்.

இந்தியாவில் பிரிவினையை தூண்டும் அமைப்பாக தடைசெய்யப்பட்டிருக்கும் சீக்கிய அமைப்பு ஒன்றின் முக்கிய உறுப்பினர் கனடாவில் கொல்லப்பட்டார். உடனடியாகவே இதற்கு பின்னால் இந்திய அரசு இருப்பதாக கூறி, இந்தியத் தூதரக அதிகாரிகளை வெளியேற்றினார். இதனால் இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையில் இராஜதந்திர விரிசல் ஏற்பட்டது. ஆனால், இதற்கான ஆதாரங்கள் எதனையும் அவர் இன்றுவரையில் வெளியிடவில்லை. இவ்வாறு ரூடோவின் அணுகுமுறைகளால் தொடர்ந்தும் கனடிய தாராளவாத கட்சி பின்னடைவுகளை சந்தித்துக் கொண்டிருந்த நிலையில்தான், ரூடோ கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து வெளியேறுவதாக அறிவித்திருக்கின்றார். உண்மையில் இந்தத் தேர்தலில் போட்டியிட்டாலும் அவர் தோல்வியடைப் போவது நிச்சயம் என்பதைத் தெரிந்தே அவர் பதவிவிலகலை அறிவித்திருக்கின்றார்.

ஆனாலும் மேற்குலக அரசியல் தலைவர்களிடம் ஒரு நல்ல பண்புண்டு அதாவது, தாங்கள் தொடர்ந்தும் பதவியிலிருப்பது பொருத்தமற்றது என்று கருதினால் பதவியிலிருந்து விலகிவிடுவார்கள். ஆனால் நமது தமிழர் அரசியல் சூழலிலோ தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடையும் கட்சியின் தலைவர்கள், அடுத்த தேர்தல் வரும் வரையில் நித்திரைகொண்டு விட்டு, எவ்வித கூச்சமுமின்றி, மீண்டும் தேர்தலில் போட்டியிடுவார்கள். இது ஓர் அரசியல் சாபக் கேடாகவே தொடர்கின்றது. கடந்த தேர்தலில் மோசமான தோல்வியை சந்தித்திருக்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்கள் எவருமே இன்றுவரையில் தங்களின் பதவி விலகலை அறிவிக்கவில்லை. தங்களின் கட்சித் தலைமைப் பொறுப்பை அடுத்தவர்களிடம் ஒப்படைக்க முயற்சிக்கவில்லை. அடுத்த தலைவர்களுக்கான தகுதியுடன் கட்சியில் எவரும் இல்லையா?

ரூடோவின் அறிவிப்பு தொடர்பில் அமெரிக்க நியூயோர்க் ரைம்ஸ் கட்டுரையொன்றில் ரூடோ தனக்குத் தானே எதிரியான ஒருவர் என்று பதிவிடப்பட்டிருக்கின்றது. ரூடோ 2015இல் பதவியேற்ற போது அவர் ஒரு கவர்சிகரமான கனடிய தலைவராக நோக்கப்பட்டார். ஒரு திரைப்பட நடிகருக்கான கவர்ச்சியோடு வலம் வந்தார். அப்போது நியூயோர்க் ரைம்ஸ் இவ்வாறு குறிப்பிட்டிருந்தது. அவர் ஓர் அலங்காரமான கட்டவுட் பொம்மை. அது சரியென்பதை அவரது பின்னைய ஆட்சிக் காலம் நிரூபித்திருந்தது.

ரூடோவை தைப் பொங்கலுக்கு அழைத்து மகிழ்வதன் மூலம் தமிழ் புலம்பெயர் சமூகத்தினால் சர்வதேச அரசியலை கையாண்டுவிடலாம் என்று நம்பிய ஒரு புலம்பெயர் தரப்புமுண்டு. ரூடோ வேட்டியுடன் பொங்கல் நிகழ்வுகளில் பங்குகொள்வார் - பின்னர் சீக்கிய நிகழ்வுகளில் அவர்களின் நிறங்கள் அடங்கிய தலைப்பாகைகளை அணிந்தவாறும் நிற்பார் - மறுபுறும் ஆபிரிக்கர்களின் நிகழ்வுகளில் அவர்களுக்கு ஏற்றவாறும் நிற்பார். ஏனெனில், அவருக்குத் தேவை அலங்காரமான விளம்பரங்கள் - ஏனெனில் அவர் ஒரு கட்டவுட் பொம்மை.

# கிளீன் சிறீலங்கா திட்டம் பற்றி யாழில் விழிப்புணர்வு நிகழ்ச்சி





யாழ்ப்பாணம்,ஜன.11

கிளீன் சிறீலங்கா திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர், 2025 ஆம் ஆண்டு அறிமுகத்துடன் - தேசிய நிகழ்ச்சித் திட்டமானது டிஜிற்றல் மயப்படுத்தல், வறுமை ஒழித்தல் மற்றும் கிளீன் சிறீலங்கா என வகைப்படுத்தப்பட்டு முக்கியத்துவம் பெறுகின்றது. "செழுமையான நாடு - அழகான வாழ்க்கை" என்ற அரசாங்கத்தின் கொள்கைக்கமைய, அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைவரும் பொது மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு அர்ப்பணிப்புடன் வினைத்திறனாக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்வில், ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சாரதாஞ்சலி மனோகரன் கலந்து கொண்டு, கிளீன் சிறீலங்கா திட்டத்தின் நோக்கம் மற்றும் மாற்றங்களை உருவாக்குதல் தொடர்பில் விளக்கமளித்தார். மேலும், கிளீன் சிறீலங்கா தேசிய வேலைத் திட்ட நிகழ்வில் எடுத்துக் கூறப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தியதுடன்,

ஏனைய உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு செயல்திட்டங்களை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

(எ-05)

# தமிழர் பண்பாட்டு பெருநாட்களிலாவது மட்பாண்டங்களைப் பயன்படுத்துங்கள்

### ஐங்கரநேசன் வேண்டுகோள்



யாழ்ப்பாணம், ஜன.11

தைப்பொங்கல் மதங்களைக் கடந்து தமிழ் மக்கள் அனைவராலும் கொண்டாடப்படுகின்ற ஒரு பண்பாட்டுப் பெருவிழா. இயற்கையைப் போற்றுகின்ற இவ்விழாவில் இயற்கைக்கு இசைவான மண்பானைகளிலேயே தொன்றுதொட்டுப் பொங்கல் இடம்பெற்று வந்துள்ளது. ஆனால், வசதி கருதி மண்பானைகளைத் தவிர்த்து அலுமியப் பானைகளில் பொங்கும் போக்கு எம்மிடையே அதிகரித்துள்ளது.

அலுமியப் பாத்திரங்களை முற்றாகத் தவிர்க்க இயலாது போனாலும் தைப்பொங்கல் போன்ற பண்பாட்டுப் பெருநாட்களிலாவது மட்பாண்டங்களைப் பயன்படுத்துவோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் இடம்பெற்ற பசுமை இயக்கத்தின் மண்பானைப் பொங்கல் பொதிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ-05)

# கிளிநொச்சி விபத்தில் முதியவர் பலி!

கிளிநொச்சி, ஜன. 11


கிளிநொச்சி நகரில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வீதி விபத்தில் சிக்கி முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பகுதியிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த பேருந்து, கிளிநொச்சி கந்தசாமி கோவிலுக்கு முன்பாக வீதியை கடக்க முற்பட்ட முதியவர் மீது மோதியது. இதில், கிளிநொச்சி கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த யோகலிங்கம் குமரேசன்(வயது - 74) என்ற முதியவரே பரிதாபகரமாக உயிரிழந் தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விஷயங்களை முன்னின்று நடத்து வீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கடன் வாங்க வேண்டிவரும்.

**மிதுனம்**
கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். அண்டை அயலார் சிலரின் செயல்பாடுகளால் கோபம் எரிச்சல் அடையலாம். குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். நிதானம் தேவைபடும் நாள்.

**கடகம்**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள்.பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வாகன வசதிப் பெருகும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். மதிப்புக் கூடும் நாள்.

**சிம்மம்**
உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புதியசிந்தனைகள் பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். பிள்ளைகளிடம் எதிர்மறையாக பேசாதீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வாகனத்தை சரி செய்வீர்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**தனுசு**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பளிப்பார்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சுப நிகழ்ச்சியில் கலந்துக் கொள்வீர்கள். நாடிவந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். லாபம் உண்டு.

**மகரம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். தாய்வழி உறவினர் களால் அலைச்சல் ஏற்படும். பணப் பற்றாக் குறையை சமாளிப்பீர்கள். புது வேலை அமையும்.

**கும்பம்**
மகளுக்கு நல்ல வரன் அமையும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வுகிடைக்கும். சொந்த பந்தங்களின் சுயரூபத்தை அறிந்து கொள்வீர்கள்.

# முல்லைத்தீவு கல்வி வலயத்தில் மட்டும் வெளிமாவட்டம் செல்லாத 500 ஆசிரியர்கள்

முல்லைத்தீவு, ஜன.11

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 20 கிலோ மீற்றர் தூரத்துக்குள் மாறி மாறி தொடர்ச்சியாக சேவையாற்றி வரும் சுமார் 500 ஆசிரியர்களால் யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து அங்கு சேவைக்குச்செல்லும் ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு பல வருடங்களாக இடமாற்றம் இன்றி சென்றுவரும் ஆசிரியர்கள் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட நிலையில் குறித்த விவரம் வெளியாகியுள்ளது.

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் மட்டும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் வழங்கப்பட்ட தகவலின்படி 66 பாடசாலைகளில் 512 ஆசிரியர்கள் முல்லைத்தீவு வலயத்தின் 20 கிலோ மீற்றருக்கு உள்ளேயே மாறி மாறி சேவையில் உள்ளமை தெரியவந்துள்ளது.

இதனால், யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்ட சேவைக்கு முல்லைத் தீவு செல்லும் ஆசிரியர்கள் சுமார் 150 கிலோ மீற்றர் வரை பிரயா ணம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

(எ-05)

# யாழில் சுண்ணக்கல்லுடன் கைப்பற்றப்பட்ட வாகனத்தைச் சோதனையிட்ட பொலிஸார்!

யாழ்ப்பாணம்,ஜன.11

பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரனால் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் வைத்து வழிமறிக்கப்பட்டு சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சுண்ணக்கல்லை ஏற்றிச்சென்ற கனரக வாகனம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வைத்து சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.



சுண்ணக்கல்லை ஏற்றி வந்த வாகனத்தில் ஏதேனும் சந்தேகத்துக்கு இடமான பொருட்களை மறைத்து எடுத்துச் சென்றிருக்கலாம் என்ற சந்தேகம் வெளியிடப்பட்ட நிலையில் சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் சுண்ணக்கற்களை வாகனத்தில் இருந்து அகற்றி சோதனைக்கு உட்படுத்தினர்.

மேற்படி சோதனை நடவடிக்கையின் போது எந்தவொரு சந்தேகத்துக்கிடமான பொருட்களும் இல்லாத நிலையில் பொலிஸார் கனரக வாகனம் மற்றும் சுண்ணக்கற்களை சாவகச்சேரி நீதிமன்றில் பாரப்படுத்தினர்.

(எ-05)

# ஒரு போத்தல் கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன.11

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் பகுதியில் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸார், குறித்த சந்தேகநபரிடம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது ஒரு போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.


மேலதிக விசார ணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவ டிக்கைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

(எ-05)

# கிளீன் சிறீலங்கா திட்டம் தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு தெளிவூட்டல்

கிளிநொச்சி, ஜன.11

கிளிநொச்சி மாவட்ட அரச அதிகாரிகளுக்கான “கிளீன் சிறீலங்கா - தூய்மையான இலங்கை” திட்டம் தொடர்பில் தெளிவூட்டல் கருத்தரங்கு நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.



இதன்போது, ”ஒரு செழிப்பான தேசம் ஒரு அழகான வாழ்க்கை” என்ற ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய ‘தூய்மையான இலங்கை’ திட்டம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் உதவிச் செயலாளர் சாரதாஞ்சலி மனோகரன் தெளிவுபடுத்தல் கருத்துரைகளை வழங்கினார்.

அரச பணியை உத்தியோகத்தர்கள் திறப்பட மேற்கொள்ள வேண்டும் எனவும் அனைத்துத் துறைகளும் சமூகம், சுற்றுச்சூழல், நெறிமுறை, சார்ந்து தங்கள் பணிகளை திறம்பட ஆற்றி மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

(எ)

# காரைநகர் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களுக்கும் விளக்கமறியல்!

யாழ்ப்பாணம்,ஜன.11

காரைநகர் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மீன்பிடி படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்று உத்தரவிட்டது.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் உணவுக்காக கடன்வாங்கும் 32வீத மக்கள்

## ஆய்வு ஒன்றில் தகவல்

கொழும்பு, ஜன. 11

**நாட்டின் பத்து மாவட்டங்களில் நடத்தப்பட்ட ஆய்வில், 32 சத வீத குடும்பங்கள் தங்கள் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய கடன் வாங்குவதாகக் தெரியவந்துள்ளது.**

உணவு சார்ந்த தகவல் மற்றும் செயல் வலையமைப்பு நடத்திய ஆய்வில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வை நிறுவனத்தின் ஆராய்ச்சி அதிகாரி ஷெஹாரி விஜேசிங்க நடத்தினார்.

இந்த கணக்கெடுப்பு கடந்த ஆண்டு (2024) மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, பதுளை, இரத்தினபுரி, காலி, நுவரெலியா, கொழும்பு, அனுராதபுரம் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 20 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கி இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள கொலன்னாவ மற்றும் மஹரகம பிரதேச செயலாளர் பிரிவுகள் இந்த கணக்கெடுப்புக்காக தேர்ந்தெடுக்கப்பட்டன.

இதில் 62 வீதமானோருக்கு நிலையான வருமான ஆதாரம் இல்லை என்பதும், கிட்டத்தட்ட 57 வீதம் பேருக்கு உணவுப் பாதுகாப்பு இல்லை என்பதும் தெரியவந்தது.

இந்த மாதிரியில் 35 வீத வீட்டு உரிமையாளர்களின் மாத வருமானம் 49,000 ரூபாவுக்கும் குறைவாக உள்ளது.

கணக்கெடுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தங்கள் வருமானத்தில் 42 வீதத்தை உணவுக்காகச் செலவிடுகிறார்கள். அதே நேரத்தில் 6 வீதம் மட்டுமே சுகாதாரத்திற்காக ஒதுக்கப்படுகிறது.

மேலும், கல்விக்காக 9 வீதம் ஒதுக்கப்படுகிறது. கணக்கெடுக்கப்பட்ட குழு வில் 31.7 வீதம் பேர் உணவு வாங்க கடன் வாங்கியுள்ளதாக வும், தங்க நகைகளை அடகு வைப்பதன்மூலமோ, தங்களிடம் இருந்த சொத்துக்களை விற்பதன் மூலமோ அல்லது கடன் வாங்குவதன் மூலமோ உணவுக்கான பணத்தை தேடுவதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாட்டில் பிறப்பு விகிதம் கணிசமாக குறைவடைவு

## மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா

கொழும்பு, ஜன. 11

கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் பிறப்பு விகிதம் கணிசமாகக் குறைந்துள்ளதாக குழந்தை மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை இந்த நாட்டின் எதிர்காலத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கடந்த 10 ஆண்டுகளில் கவனிக்கப்பட்ட ஒரு விடயமாக, இந்த நாட்டில் பிறப்பு எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகிறது.

2013 ஆம் ஆண்டில் 3 இலட்சத்து 50 ஆயிரம் ஆக இருந்த பிறப்புகள், 2024 ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 28 ஆயிரம் ஆகக் குறைந்துள்ளது.

அந்தக் குழந்தைகளில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர் நோய் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

20 வருடங்களுக்கு முன்பு நாம் காணாத ஒரு சூழ்நிலை இப்போது உருவாகியுள்ளது.

குழந்தை பருவ நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

குழந்தைப் பருவப் புற்று நோய் பற்றிய அறிக்கைகள் அதிகரித்துள்ளன.

மனநோய் அதிகரிப்பதையும் நாம் காண்கிறோம்.

இது போன்று குழந்தைகள் நோய்வாய்ப்பட்டால், எதிர்காலம் நன்றாக இருக்காது.

நாம் அனைவரும் இதைப் பற்றி கவனமாக இல்லாவிட்டால், நாம் அனைவரும் கடினமான சூழ்நிலையை எதிர் நோக்க நேரிடும்-என்றார். (அ)

# டயானா கமகேயுக்கு எதிராக குற்றப்பத்திரம்

கொழும்பு, ஜன. 11

போலி ஆவணங்களை சமர்ப்பித்து கடவுச்சீட்டைப் பெற்றதாகக் கூறி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டது.

கொழும்பு மேல்ர் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன முன்னிலையில் வழக்கு அழைக்கப்பட்டபோது இந்தக் குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டது.

அதன் பின்னர் பிரதிவாதியான டயானா கமகே, தான் நிரபராதி என கூறினார்.

பிரதிவாதி சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஷனக ரணசிங்க, ஆரம்ப ஆட்சேபனைகளை எழுப்பி, இந்த வழக்கு அடிப்படையாகக் கொண்ட ஆவணம் 2003 இல் தயாரிக்கப்பட்டது என கூறினார்.

இருப்பினும், இந்த வழக்கு 2024 இல் தாக்கல் செய்யப்பட்டதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சட்டத்தரணி, அதன்படி 20 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டதால், குறித்த ஆவணம் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்ய எந்த சட்ட அடிப்படையும் இல்லை என வாதிட்டார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த மேல் நீதிமன்ற நீதிபதி, இது குறித்து வழக்கு விசாரணையின் போது பரிசீலிக்கப்படும் என குறிப்பிட்டு வழக்கை மார்ச் 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிட்டார். (அ)

# மியன்மார் அகதிகளின் விடயத்தில் மனிதாபிமானத்துடன் செயற்படுக!

## ரிஷாத் பதியுதீன் சபையில் கோரிக்கை

கொழும்பு, ஜன. 11

சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளித்து, மியன்மார் ரோஹிங்கிய அகதிகள் விவகாரத்தில் மனிதாபிமான ரீதியில் செயற்படுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் சபையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது-மியன்மார் அரசாங்கத்தினாலோ அல்லது வேறு சில குழுக்களினாலோ, அங்குள்ள முஸ்லிம் மக்களை கொடுமைப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தேர்ச்சியாக நடைபெறுகின்றன. இதனால், 10 இலட்சத்துக்கும் மேற்பட்டோர், தங்கள் உயிர்களை பாதுகாக்க பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு சென்று தஞ்சமடைந்துள்ளனர்.

அதுபோலவே, எங்கோ சென்ற இந்த அகதிகள், துரதிஷ்டவசமாக இலங்கையில் கரையொதுங்கியுள்ளனர். எனவே, அவர்களை சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையில் மியன்மாருக்கு திருப்பி அனுப்புவது நியாயமில்லை. அவ்வாறு அனுப்பும் பட்சத்தில், இதைவிட பெரிய கொடுமை ஏதும் இருக்காது.

எனவே அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மற்றும் ஐ.நா நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி, அகதிகளை தாம் விரும்பும் நாடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நமது நாட்டிலிருந்தும் இவ்வாறு அகதிகளாகச் சென்றவர்கள், வேறு நாடுகளில் மகிழ்ச்சியுடன் நல்ல நிலையில் வாழ்கின்றனர்.

எனவே, சர்வதேச நடைமுறையை மதித்து செயற்படுங்கள். மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, இவ்வாறு வந்த அகதிகளை முறைப்படி தாம் விரும்பிய நாடுகளுக்கு அனுப்பி வைத்ததை இங்கு நினைவூட்ட விரும்புகின்றேன். அதேபோன்று, மியன்மார் அகதிகளுக்கு உதவி செய்ய விரும்புபவர்களை தடுக்க வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றேன்-என்றார். (அ)

# மேலதிக நேர கொடுப்பனவை வழங்குவதற்கு ரூ. 3823 கோடி செலவழித்த சுகாதார அமைச்சு

கொழும்பு, ஜன. 11

சுகாதார அமைச்சு 2023ஆம் ஆண்டில் திறைசேரி செயலாளரின் சுற்றிக்கைக்கு மாறாக, மேலதிக நேர மற்றும் கட்டாய தினசரி ஊதியத்துக்காக 3823 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையை செலவழித்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கின்றது.

மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாட்களுக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை சம்பள பட்ஜெட்டில் 72 வீதம் என்றும் அறிக்கை கூறுகிறது.

வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்காக மூன்று கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை செலவழித்து சுகாதார அமைச்சினால் நிறுவப்பட்ட 213 கைரேகை இயந்திரங்கள் செயலிழந்து காணப்படுவதாக தேசிய தணிக்கை அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்தத் தகவல் சுகாதார அமைச்சு தொடர்பாக வெளி யிடப்பட்ட சமீபத்திய தணிக்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ)

# துறைமுகத்தில் தேங்கி கிடக்கும் சுமார் ஆயிரம் கொள்கலன்கள்!

கொழும்பு, ஜன. 11

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை அனுமதிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் 800 முதல் 1000 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாக கொள்கலன் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

துறைமுக அதிகார சபை மற்றும் சுங்கத் திணைக்களத்தின் நிர்வாகத்தில் நிலவும் குறைபாடுகள் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை அனுமதிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள ஊடகவியலாளர் சந்திப்பின்போது கூறினார். இதற்கிடையில், இறக்கு மதி செய்யப்பட்ட பொருட்க ளின் விலை 20 வீதத் தால் அதிகரிக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# கைதிக்கு போதைப்பொருளை கொண்டு சென்ற இளைஞனுக்கு ஆயுள் தண்டனை!

கொழும்பு, ஜன. 11

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவருக்கு போதைப்பொருளை கொண்டு சென்றதாகக் கூறப்படும் இளைஞனுக்கு ஆயுள் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்னவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர் 26 வயதுடைய இளைஞர் ஆவார்.

இந்த இளைஞன் 2019 ஆம் ஆண்டில், கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவருக்கு உணவுப் பொதியில் 25 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை கொண்டு சென்றபோது சிறைச்சாலை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து, இந்த இளைஞனுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இளைஞனுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சாட்சிகள் அனைத்தும் நிரூபிக்கப்பட்டதையடுத்து இந்த தண்டனை விதிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க-சஜித் சேர்ந்தால் அரசுக்கு பெரும் சவால்!

## கூறுகிறார் நவீன் திஸாநாயக்க

கொழும்பு, ஜன. 11

**உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து போட்டியிட்டால் அது அரசாங்கத்துக்கு பெரும் சவாலாக அமையும் என்று முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

இரு கட்சிகளும் இணைய வேண்டும் என்பது பற்றி பேச்சுகள் இடம்பெறுகின்றன. எனவே, உள்ளாட்சிசபைத் தேர்தலில் ஒரே சின்னத்தின் கீழ், ஒரே பட்டியலில் போட்டியிட்டால் அது அரசாங்கத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும். அவ்வாறு நடக்க வேண்டும்.

இரு கட்சிகளும் ஒரு இடத்துக்கு வந்து தேர்தலில் பொது பட்டியலை தயாரிக்க வேண்டும். சில தொகுதிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி, சில தொகுதிகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களை நிறுத்தலாம். ஐக்கிய மக்கள் சக்திக்கு கூடுதலாக இடமளிக்க வேண்டும்-என்றார். (அ)

# இஸ்ரேல் வாழ் இலங்கையர் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடல்

கொழும்பு, ஜன. 11

இஸ்ரேலில் விவசாய தொழில்துறைக்காக சென்றுள்ள இலங்கையர்கள் முகங்கொடுக்கும் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அந்த நாட்டு சனத்தொகை, குடிவரவு மற்றும் எல்லை தொடர்பான அதிகார சபையின் பிரதிநிதிகள் அடுத்த வாரம் நாட்டுக்கு வருகை தரவுள்ளனர்.

குறித்த குழுவினரின் இலங்கை விஜயத்தின்போது இஸ்ரேலுக்கு விவசாய தொழிலில் இணைவதற்காக விண்ணப்பித்தவர்கள் கையொப்பமிட்ட ஒப்பந்தம் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, இலங்கையிலிருந்து விவசாய துறைக்காக எதிர்காலத்தில் புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுமாயின் அவர்கள் அனைவரும் குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

தமிழ், சிங்கள மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ள அந்த ஒப்பந்தத்தில் தொழில் பொறுப்பு, வேதனம் உள்ளிட்ட சகல விடயங்களும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார். குறித்த ஒப்பந்தத்தை மீறுபவர்கள் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் என இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார். (அ)

# அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுங்கள்!

## வர்த்தகர்கள் நேற்று போராட்டம்

கொழும்பு, ஜன. 11



அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தி அக்கரப்பத்தனை மன்றாசி நகரில் வர்த்தகர்கள் நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

அக்கரப்பத்தனை, மன்றாசி நகர வர்த்தகர்கள் இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது, நகர வர்த்தகர்களும், பொது மக்களும் கலந்து கொண்டு சுலோகங்களை ஏந்தியவாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுப்பட்டனர்.

அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ளதால் அதனை உரிய வகையில் நுகர்வோருக்கு விற்கமுடியாத சூழ்நிலை ஏற்படுவதாகவும், இதனால் சிறு வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக போராட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த போராட்டகாரர்கள்-

நாட்டில் தைப்பொங்கல் வருகின்றது. இதற்கு பொங்கல் பொங்குவதற்கு சிவப்பு அரிசி உள்ளிட்ட அரிசி வகைகள் தேவைப்படுகின்றது. எனினும், அரிசி தட்டுப்பாடு நிலவுகின்றது.

கட்டுப்பாட்டு விலைக்கு தான் எங்களுக்கு அரிசி வழங்கப்படுகின்றது. அவ்வாறு கட்டுப்பாட்டு விலையை மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

கொழும்பிலிருந்து இந்த பகுதிக்கு அரிசியை கொண்டு வருவதாக இருந்தால் போக்குவரத்து கட்டணம், சுமை தாங்கிகளின் கட்டணம் என பல விடயங்கள் இருக்கின்றன.

எனவே, கட்டுப்பாட்டு விலைக்கு விற்கமுடியாத சூழ்நிலை இருக்கின்றது.

ஆகவே, கட்டுப்பாட்டு விலையை நீக்கு வதற்கும், அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு அரசாங் கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றனர். (அ)

# இறக்குமதி செய்யப்படும் அரிசி பாவனைக்குப் பொருத்தமற்றது

## தேசிய விவசாயிகள் ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 11

இறக்குமதி செய்யப்பட்டுள்ள அரிசி நாளாந்த பாவனைக்கு பொருத்தம் இல்லை எனவும், மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் அரிசி இறக்குமதி செய்யப்படவில்லை எனவும் தேசிய விவசாயிகள் ஒன்றியத்தின் தலைவர் அநுராத தென்னக்கோன் தெரிவித்தார்.

பாஸ்மதி அரிசியை போன்று வேறு ஒரு வகை அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிஉப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பண்டிகைக் காலமாக இருந்த போதிலும் டிசெம்பர் 25 ஆம் திகதி அரிசிப் பிரச்னைக்கான தீர்வை இந்த அரசாங்கத்தினால் வழங்க முடியவில்லை.

அதேபோன்று புத்தாண்டிலும் கூட சில பிரதேசங்களில் அரிசிக்கு தட்டுப்பாடு நிலவியது. ஆனால் தற்போது தைப் பொங்கல் பண்டிகையை எதிர்நோக்கி நாட்டுமக்கள் காத்திருக்கின்றனர்.

பாஸ்மதி அரிசியை போன்று வேறு ஒரு வகை அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அது எம்முடைய நாட்டில் நாளாந்த பாவனைக்கு பொருத்தம் இல்லாத அரிசி வகையாகவுள்ளது.

நாட்டு மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் அரிசி இறக்குமதி செய்யப்படவில்லை. மாறாக பொருத்தமற்ற அரிசியே இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து அரிசியை இறக்குமதி செய்வது என்றால் எம்முடைய நாட்டிற்கும் எமது உணவு முறைமைக்கும் பொருத்தமான அரிசியா என பரிசோதிக்கவேண்டியது அவசியமாகும்.

அரிசி இறக்குமதி குறித்த வர்த்தமானியில் காணப்படும் குறைபாட்டின் காரணமாக இறக்குமதி செய்யப்படும் அரிசியை 250 தொடக்கம் 300 ருபாய் வரை அதிகரித்த விலைக்கு விற்பனை செய்யும் திட்டத்தையும் வகுதித்துள்ளனர்.

அந்த வகையில் நாட்டினுள் அரிசிக்கான பிரச்னைக்கு எந்த தீர்வும் எட்டப்படவில்லை.

ஆகவே அரசாங்கம் அரிசிப்பி ரச்னைக்கான தீர்வை உடன டியாக பெற்றுத்தரவேண்டும்-என்றார். (அ)

# புதிய பணிப்பாளர் நாயகம் நியமனம்

கொழும்பு, ஜன. 11

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவின் புதிய பணிப்பாளர் நாயகமாக மேல் நீதிமன்ற நீதிபதி ரங்க திசாநாயக்கவை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமித்துள்ளார்.

இதற்கமைவான நியமனக் கடிதம் ஜனதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் மேல் நீதிமன்ற நீதிபதி ரங்க திசாநாயக்கவுக்கு நேற்று வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது. (அ)

# மனுஷ கைச்சாத்திட்ட விஸா ஒப்பந்தம் சட்டவிரோமானது

## அமைச்சர் விஜித ஹேரத்

கொழும்பு, ஜன. 11

கொரிய பிராந்திய நகர பிதாவுடன் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார கைச்சாத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் ஈ8 விஸா தொடர்பான ஒப்பந்தம் முற்றாக சட்டவிரோதமானதாகும். அதற்கு அமைச்சரவையின் அனுமதியும் இல்லை. அத்துடன் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கொரியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமே இலங்கை என திருத்தப்பட்டிருக்கிறது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஆளும் கட்சி உறுப்பினர் லக்மாலி ஹேமசந்திரவினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# விமான நிலையத்துக்குள்ளே சொகுசு பஸ்களுக்கு அனுமதி

கொழும்பு, ஜன. 11

187 வழித்தடத்தில் இயங்கும் கோட்டை - கட்டுநாயக்க சொகுசு பஸ்கள் நேற்று முதல் விமான நிலையப் புறப்பாடு முனையத்துக்குள் பிரவேசிப்பதற்கு விமான நிலைய மற்றும் விமான சேவை நிறுவனம் அனுமதி வழங்கியுள்ளது.

விமானப் பயணிகளின் வசதிக்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

சுமார் 6 ஆண்டுகளுக்குப் பிறகு கோட்டை - கட்டுநாயக்க பஸ்கள், விமான நிலையப் புறப்பாடு முனையத்திற்கு செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

இருப்பினும், விமான நிலையத்தில் தரித்து நின்று இந்த பஸ் சேவையை இயக்க வாய்ப்பு இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து, பாதுகாப்புப் பிரிவின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தப் பஸ் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. (அ)

# பொதுஜன பெரமுனவுக்கு சுதந்திரக் கட்சி அழைப்பு!

கொழும்பு, ஜன. 11

சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறியுள்ள அனைவரும் மீண்டும் தாய்வீடு திரும்ப வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் அக்கட்சியின் பொதுச் செயலாளரான முன்னாள் அமைச்சர் துமிந்த திஸநாயக்க.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

மொட்டு கட்சிகூட சுதந்திரக் கட்சி உறுப்பினர்களால் தான் ஆரம்பிக்கப்பட்டது. எனவே, சுதந்திரக்கட்சி என்ற தாய்வீட்டில் கதவுகள் திறந்தே உள்ளன. கட்சியில் இருந்து வெளியேறியவர்கள் மீண்டும் வரலாம்.

சுதந்திரக் கட்சியின் வாக்குகள்தான் தேசிய மக்கள் சக்திக்கு சென்றுள்ளது. தற்போது அரசியல் என்பது பாராளுமன்றத்தில் இல்லை. அதற்கு வெளியில் தான் உள்ளது. எனவே, பாராளுமன்றத்துக்கு வெளியில் சமூகத்தை அணி திரண்ட சுதந்திரக் கட்சி தயாராக உள்ளது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த அரசின் பாதையிலேயே இந்த அரசும் பயணிக்கின்றது!

## புபுது ஜாகொட குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 11

**கடந்த அரசாங்கத்தின் பாதையில் இந்த அரசாங்கம் பயணிப்பதாக முன்னிலை சோசலிச கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் புபுது ஜாகொட குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.**

மக்கள் சந்திப்பு ஒன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கம் இன்று 5 பில்லியன் டொலர் அந்நிய செலாவணி கையிருப்பு உண்டு மார்தட்டிக் கொண்டாலும், நாடு வங்குரோத்து அடைந்துவிட்டதாக அறிவித்த காலத்திலும் இலங்கையிடம் 10 பில்லியன் டொலர் அந்நிய செலாவணி கையிருப்பு இருந்தது.

அதி புத்திசாலி எனக் கூறப்படும் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங் உள்ளிட்டவர்கள் இந்த அழிவுக்கு பொறுப்பு சொல்ல வேண்டும்.

வாகனங்களைக் கொள்வனவு செய்தால் மீண்டும் நாட்டில் டொலர் கையிருப்பு குறைவடையும்.

இலங்கை செலுத்த வேண்டியுள்ள 12 பில்லியன் டொலர் சர்வதேச பிணைமுறி பத்திரங்களை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடனாக பெற்றுக்கொண்டார்-என்றார். (அ)

# இரத்தினக்கல் தொழிற்துறையில் தாய்லாந்தை நாம் முந்தவேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 11

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில்துறைக்கு விதிக்கப்பட்டுள்ள வற் மற்றும் சமூகப் பாதுகாப்பு வரிகள் நீக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஜெம் ஸ்ரீ லங்கா 2025 சர்வதேச இரத்தினக்கல் கண்காட்சியைப் பார்வையிட்டதன் பின்னர் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்தத் தொழிலின் நிகர இலாபத்துக்கு வரி விதிக்கப்படக் கூடாது. எமது நாட்டில் இந்தத் துறையை மழுங்கடிப்பதற்குப் பதிலாக இத்தொழிற்துறையை முன் னேற்றுவதற்குச் சாதகமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமின்றி, திறமையான கைவினைஞர்களை உருவாக்கி, ஏற்றுமதித் தொழிலாக இதனை மேலும் முன்னேற்றுவதற்கு அதிகபட்ச சலுகைகளை வழங்கவேண்டும்.

ஹொங்கொங் மற்றும் தாய்லாந்தை முந்திச் செல்லும் வகையில் எமது நாட்டின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலை உருவாக்க வேண்டும்-என்றார். (அ)

# இன, மத அவமதிப்புகளுக்கு இனிமேல் இங்கு இடமில்லை

கொழும்பு, ஜன. 11

இலங்கையில் இனிமேல் இன, மத அவமதிப்புகளுக்கு, வன்முறைகளுக்கு இடமேயில்லை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

இஸ்லாம் மதத்தை அவமதித்த குற்றத்துக்காகப் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 9 மாதச் சிறைத்தண்டனையை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் விதித்துள்ளமை தொடர்பில் பாராளுமன்ற வளாகத்தில் பிரதமரிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, இன, மத வன்முறைகளை மீண்டும் தூண்ட முயல்வோர் தொடர்ந்து சிறைகளில் அடைக்கப்படுவார்கள் என்றும் பிரதமர் எச்சரிக்கை விடுத்தார்.

எவராக இருந்தாலும் குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் பிரகாரம் தண்டிக்கப்படுவார்கள் என்று சுட்டிக்காட்டிய பிரதமர், அப்படியானவர்களுக்கு நீதிமன்றம் வழங்கும் தண்டனையை தேசிய மக்கள் சக்தி அரசு வரவேற்கும் எனவும் குறிப்பிட்டார். (அ)

# சாதாரண கைதிகள் தடுத்து வைக்கப்படும் அறையிலேயே ஞானசார தேரரும் உள்ளார்!

கொழும்பு, ஜன. 11

இஸ்லாம் மதத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் வெலிக்கடை சிறைச்சாலையின் சாதாரண கைதிகள் தடுத்து வைக்கப்படும் அறையில் சிறை வைக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, பதிவு செயல்முறைக்குப் பின்னர், ஞானசார தேரர் சிறையில் அணிய வேண்டிய ஆடையை பரிந்துரைப்பதில் சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம் பின்பற்றப்படும் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16ஆம் திகதி கிருலப்பனை பகுதியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இஸ்லாம் மதத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டதாக பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

குறித்த வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன முன்னிலையில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அவருக்கு 9 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், 1,500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

இந்த தண்டனைக்கு எதிராக பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரினால் மேன்முறையீடு செய்யப்பட்டது.

இருப்பினும் குறித்த பிணை மனு நிராகரிக்கப்பட்டதுடன், அத்தகைய பிணை மனுவை பரிசீலிப்பதற்கான விசேட காரணங்களை முன்வைக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# நுண்நிதி, கடன் ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபை சட்டமூலம் குறித்த அறிக்கை நிதியமைச்சிடம்!

கொழும்பு, ஜன. 11

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை சட்டமூலத்தை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு தமது அறிக்கையை நிதி அமைச்சிடம் கையளித்துள்ளது.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குப்படுத்தலுக்காக 2023 ஆம் ஆண்டு இந்த சட்டமூலம் பாராளுமன்றில் சமர்பிக்கப்பட்டது.

இதற்கு எதிராக முன்வைக்கப்பட்ட 6 அடிப்படை உரிமைகளை விசாரணை செய்த உயர்நீதிமன்றம், சட்டமூலத்தின் பல சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது என உத்தரவிட்டிருந்தது.

இதன்பின்னர், சட்டமூலம் தொடர்பில் மீண்டும் கருத்து கோருவதற்காக குழு நியமிக்கப்பட்டதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

அரச சார்பற்ற அமைப்பு தொடர்பான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் நாயகமான சஞ்ஜீவ விமல குணரத்ன உள்ளிட்ட 9 பேர் அடங்கிய குழு இதற்காக நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் அறிக்கையே தற்போது நிதியமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (அ)

# சம்பிக்கவுக்கு எதிரான பயணத் தடை நீக்கம்!

கொழும்பு, ஜன. 11

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி வரை தற்காலிகமாக நீக்குவதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வெள்ளிக் கிழமை உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டில் இராஜகிரிய பிரதேசத்தில் வாகன விபத்தினை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# எச்சரிக்கைகளுக்கு அஞ்சப்போவதில்லை

கொழும்பு, ஜன. 11

சட்டத்தை செயற்படுத்தவே மக்கள் எங்களுக்கு ஆணை வழங்கியுள்ளனர். எனவே தேவையற்ற எச்சரிக்கைகளைக் கண்டு அஞ்சப் போவதில்லை அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் தங்களது துறையில் மறுசீரமைப்புக்களை செய்யக்கூடாது என எதிர்பார்க்கின்றனர். அப்படி நினைத்தால் மாற்றங்களைச் செய்ய முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கண்டியில் செய்தியாளர்களிடம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்நாட்டில் சிறந்த அரசியல் கலாசாரமொன்றைக் கட்டியெழுப்ப பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. காலிமுகத்திடல் அரகலய போராட்டம் அதில் முக்கியமானது. அதன் பலனாகவே இன்று தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்துள்ளது.

அரசியல் போன்றே ஏனைய துறைகளிலும் சிறந்த மாற்றமொன்றை உருவாக்கும் பொறுப்பு எங்களுக்கு உள்ளது. இந்நிலையில் ஏதேனும் ஒரு தொழில்துறையில் இருப்பவர்கள் தங்கள் தொழில் துறையில் கை வைக்காமல் ஏனைய தொழில்துறையினர் மீது கைவைத்தால் பரவாயில்லை என்று நினைத்துக் கொண்டிருந்தால் அது தவறாகும்-என்றார். (அ)

# மியன்மார் அகதிகள் விடயத்தில் ஐ.நா. கட்டாயப்படுத்தமுடியாது!

கொழும்பு, ஜன. 11

மியன்மார் அகதிகள் விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை எம்முடைய நாட்டை கட்டாயப்படுத்த முடியாது என முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மியன்மார் அகதிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இது பாரிய பிரச்னையாகும். மேலும் ஒரு இலட்சம் அகதிகள் நாட்டுக்கு வருகை தரவுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அகதிகள் தொடர்பான எந்த ஒப்பந்தத்திலும் நாங்கள் நாடு என்ற வகையில் கையெழுத்திடவில்லை.

ஆகவே ஐக்கிய நாடுகள் சபை எம்முடைய நாட்டை கட்டாயப்படுத்த முடியாது. நாங்கள் போர்க்குற்றவாளிகள் என்று குற்றம் சாட்டப்பட்டோம். எனவே நாம் அகதிகளை ஏற்றுக்கொள்ள முடியாது. இவர்கள் அனைவரும் இஸ்லாமியர்கள். நம் நாட்டிலும் இஸ்லாமியர்கள் உள்ளனர். அவர்கள் சிங்க மக்களுடன் இணைந்து ஒற்றுமையாக இருக்கிறார்கள். மற்ற நாடுகளில் உள்ளவர்கள் அப்படி இல்லை. அந்த வகையில் நோக்கும் போது இவர்கள் நம் நாட்டுக்கு உகந்தவர்கள் அல்லர். உலகளாவிய ரீதியில் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல் மற்றும் மனித கடத்தல்கள் இடம்பெறுகின்றன. அகதிகள் என்ற போர்வையில் வருகை தருவோரால் இத்தகைய விடயங்களும் இடம் பெறுகின்றன. ஆகவே ஈஸ்டர் தாக்குதல் போன்ற தாக்குதல்கள்மீண்டும் இடம்பெறும் அச்சுறுத்தலும் இந்த விடயத்தினுள் உள்ளது.

நாடாளுமன்ற உறுப்பிளர்களான கபீர் ஹாஷிம், ரவூப் ஹக்கீம், ஆகியோர் இவர்களை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்கள். நம் நாட்டில் எத்தனை இடம்பெயர்ந்தோர் உள்ளனர். நம் நாட்டிலுள்ள மக்களைப் பற்றி நாம் சிந்திக்காமல் அகதிகளைப் பற்றி சிந்திக்க முடியாது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஊடகவியலாளர்கள் நீதிவேண்டி ஆர்ப்பாட்டம்!





**மட்டக்களப்பு, ஜன.11**
**லசந்த விக்கிரமதுங்கவின் 16 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிவேண்டி மட்டக்களப்பு காந்தி பூங்காவில் தமிழ் ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் காந்தி பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபியில் ஊடகவியலாளர்கள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சமூக ஆர்வலர்கள் இணைந்து லசந்தவின் படத்துக்கு மலர் மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்திய பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# மீன்பிடி பூனை உயிரிழப்பு



மட்டக்களப்பு, ஜன.11
மீன்பிடிப் பூனை இனத்தை சேர்ந்ததென நம்பப்படும் அரிய வகைப் புலியின் சடலம் மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோட்டைக் கல்லாற்றில் மீட்கப்பட்டது.

இவ்வாறான அரிய வகை புலிகள் காடுகளில் இருந்து உள்நுழைந்து மீன் உட்பட கிராம வாசிகளின் வளர்ப்பு பிராணிகளை வேட்டையாடி வந்த நிலையில் விபத்தில் சிக்கி உயிரிழந்தது.

இது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினரும் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். காட்டுப் பூனை என அழைக் கப்படும் இப்புலியின் சடலத்தை சுற்றி மல்லிகைப் பூக்கள் தூவப் பட்டுள்ளன. (எ)

# ஒஸ்கார் ஒன்றியத்தால் மாணவர்களுக்கு உதவி



சம்மாந்துறை, ஜன.11
அவுஸ்திரேலிய - காரைதீவு மக்கள் ஒன்றியத்தால்(ஒஸ்கார்) சம்மாந்துறை வலயத்திலுள்ள மிகவும் பின்தங்கிய மல்வத்தை கணபதிபுரம் விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களும், பாடசாலைக்கு ஒலிபெருக்கி சாதனமும் வழங்கப்பட்டன.

ஒஸ்கார் ஒன்றியத்தின் தலைவர் கந்தசாமி பத்மநாதனின் வேண்டுகோளுக்கு அமைவாக ஒஸ்கார் ஒன்றியத்தின் போசகரும் சமூக செயல்பாட்டாளருமான நாகமணி குணரெத்தினம் இந்தத் திட்டத்துக்கு பூரண நிதியுதவி வழங்கினார்.


இந்த நிகழ்வு, மல்வத்தை கணபதிபுரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் அதிபர் எஸ். கிருபைராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில், பிரதம விருந்தினராக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார். (எ)

# திருகோணமலை அரசாங்க அதிபர் கடமைகளைப் பொறுப்பேற்றார்

திருகோணமலை, ஜன.11
திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக ஜி. எம். ஹேமந்த குமார மாவட்ட செயலகத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார்.

அரசாங்க அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட முன்னர் இவர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றியுள்ளார். (எ)



# விசேட தேவையுடையோரின் சுயதொழிலுக்கு நிதியுதவி

மட்டக்களப்பு, ஜன.11
போரதீவுப்பற்றில் விசேட தேவையுடையவர்களுக்கு சுயதொழிலுக்கான நிதியுதவி வழங்கப்பட்டது.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தின் கலாசார மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

போரதீவுப்பற்று பிரதேச செயலகம் மற்றும் கதிரவன் மாற்றுத்திறனாளிகள் சங்கமும் இணைந்து லண்டன் வேல்தஸ்ரோ சிறீ கற்பக விநாயகர் ஆலய அனுசரணையுடன் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் ரங்கநாதன் தலைமையில் நடைபெற்ற



இந்த நிகழ்வில், விசேட தேவையுடையவர்களுக்கான சுயதொழிலுக்கான நிதியுதவி, நுளம்புவலைகள் மற்றும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வின்போது மாற்றுத்திறனாளிகள் மற்றும் மாணவர்களின் பல்வேறு நிகழ்வுகளும் நடைபெற்றன. (எ)

# விபத்தில் காயமடைந்த சட்டத்தரணி உயிரிழப்பு

திருக்கோவில், ஜன.11
திருக்கோவில் பிரதேச தம்பட்டை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த தம்பிலுவிலை சேர்ந்த சட்டத்தரணி எஸ். சசிராஜ் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கடந்த திங்கட்கிழமை மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது தம்பட்டைப் பிரதேசத்தில் வாகனமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானார். இந்த நிலையில், படுகாயமடைந்த அவர் அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார்.

பின்னர் கல்முனை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இருப்பினும், நேற்று முன்



தினம் இரவு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

தம்பிலுவில்லை சேர்ந்த சட்டத்தரணியும் திடீர் மரண விசாரணை அதிகாரியுமான சசிராஜ், இலங்கை சட்டக்கல்லூரியில் பயின்று சட்டத்தரணியாக வெளியேறினார்.

அக்கரைப்பற்று சட்டத்தரணிகள் சங்க அங்கத்தவர் என்பதுடன் திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும் இவர் செயல்பட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனத்தில் உயிரிழப்பு 46 ஆயிரத்தை தாண்டியது!

காஸா, ஜன.11

**இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நீடித்து வரும் போரால் பலஸ்தீனத்தில் பலி எண்ணிக்கை 46 ஆயிரத்தை தாண்டியது.**

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் ஆதிக்கம் செலுத்திவரும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் நீடித்து வரும் நிலையில், கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் தெற்கு இஸ்ரேலுக்குள் நுழைந்து 1,200 பேரைக் கொன்றனர். மேலும், 250 பேரை பணயக் கைதிகளாக கடத்திச் சென்றனர். அவர்களில், 100 பேர் இன்னும் காஸாவுக்குள் இருப்பதாகவும், மூன்றில் ஒரு பகுதியினர் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனால், கோபமடைந்த இஸ்ரேல், காஸா மீது போர் தொடுத்தது. கடந்த 15 மாதங்களாக நடந்து வரும் இந்தப் போரில், ஹமாஸ் அமைப்பினர் உட்பட இதுவரை 46 ஆயிரம் பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதுடன் ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் ஆயிரக் கணக்கானோரின் சடலங்கள் இடிபாடுகளிலும், மண்ணுக்கு அடியிலும் சிக்கியிருப்பதால், பலி எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஆப்கானின் பொருளாதார கூட்டாளியாக இந்தியா

## தலிபான் அரசு அறிவிப்பு

காபூல், ஜன.11

ஆப்கானிஸ்தானின் குறிப்பிடத்தக்க பிராந்திய மற்றும் பொருளாதார கூட்டாளியாக இந்தியா திகழ்கிறது என்று அந்த நாட்டின் வெளிவிவகாரத்துறை தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகாரத் துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி, ஆப்கானிஸ்தானின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் மவுல்வி அமிர் கான் முட்டாகியை டுபாயில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார்.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தானின் சமநிலை யான மற்றும் பொருளாதா ரத்தை மையமாகக் கொண்ட வெளிவிவகாரக் கொள்கைக்கு இணங்க, இந்தியாவுடன் அரசி யல் மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதை ஆப்கானிஸ்தான் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒரு குறிப்பிடத்தக்க பிராந்திய மற்றும் பொருளாதார கூட்டாளியாக இந்தியாவை ஆப்கானிஸ்தான் பார்க்கிறது என்று ஆப்கானிஸ் தான் வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நான் போட்டியிட்டிருந்தால் வெற்றி பெற்றிருப்பேன்

## ஜோ பைடன் சொல்கிறார்

வாஷிங்டன்,ஜன.11

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கமலா ஹாரிஸ் தோல்வியடைந்த நிலையில், தான் போட்டியிட்டிருந்தால் வெற்றி பெற்றிருப்பேன் என ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.



கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். ட்ரம்பை எதிர்த்து போட்டியிட்ட ஜனநாயக கட்சியின் வேட்பாளர் கமலா ஹாரிஸ் தோல்வியடைந்தார்.

ஜனநாயக கட்சி சார்பில் முதலில் ஜோ பைடன் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், பிரசாரத்தில் தடுமாறியதால் ஜோ பைடன் போட்டியிட எதிர்ப்பு கிளம்பியது. இதையடுத்துதான் கமலா ஹாரிஸ் களத்தில் இறங்கினார். எனினும், அவர் தோல்வியடைந்தார்.


இதனை விமர் சிக்கும் விதமாக கருத்து வெளியிட்டுள்ள ஜோ பைடன், தான் போட்டியிட்டு இருந்தால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று இருப்பேன் என்று கூறியுள்ளார். (எ)

# உடல்நலக்குறைவால் உதவியாளரை உரையை வாசிக்கக் கூறினார் போப்

ரோம், ஜன.11

உடல்நலக்குறைவு காரணமாக உதவியாளரை உரையை வாசிக்கக் கூறியுள்ளார்போப் ஆண்டவர் பிரான் சிஸ்.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் ஆண்டவர் பிரான்சிஸ் ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் வாடிகனின் வெளியுறவு கொள்கை தொடர்பில் வெளிநாட்டு தூதுவர்கள் மத்தியில் உரை நிகழ்த்துவது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டுக்கான நிகழ்ச்சி வாடிகனில் நேற்று முன்தினம் நடைபெற்றது.



போப் ஆண்டவரின் உரையை கேட்பதற்காக பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தூதுவர்கள் வந்திருந்தனர். அவர்களின் கரகோஷங்களுக்கு மத்தியில் போப் ஆண்டவர் பிரான்சிஸ் தனது உரையை தொடங்கினார்.

ஆனால், உரையின் சில வரிகளை மட்டுமே வாசித்த போப் ஆண்டவர், தான் உடல் நலக்குறைவால் அவதிப்படுவதாகவும் எனவே தனது உரையை உதவியாளர் வாசிப்பார் என்றும் தெரிவித்தார். இதன்படி போப் ஆண்டவரின் நீண்ட உரையை அவரது உதவியாளர் வாசித்தார்.

88 வயதான போப் ஆண்டவர் பிரான்சிஸ் அண்மைக்காலமாக உடல்நலப் பிரச்னைகளால் அவதிப்பட்டு வருகிறார். (எ)

# இந்து இளைஞர்கள் கடத்தல்

லாகூர்,ஜன.11

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் தடை செய்யப்பட்ட அமைப்பினர் 3 இந்து இளைஞர்களை கடத்திச் சென்று அவர்களை பணயக் கைதிகளாக சிறைபிடித்து வைத்துள்ளனர்.

பஞ்சாப் மாகாணத்தின் ரஹிம் யர் கான் மாவட்டத்தில் உள்ள போங் பகுதியில் இந்த கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஷமன், ஷமீர், சஜ்ஜன் என்ற மூன்று இந்து இளைஞர்கள் சட்டவிரோத அமைப்பால் கடத்தி செல்லப்பட்டுள்ளனர். ஆயுதத்துடன் வந்த 5 பேர் துப்பாக்கி முனையில் இந்து இளைஞர்களை நதிக்கரையை ஒட்டிய பகுதியான கட்சாவுக்கு கொண்டு சென்றுள்ளனர். அவர்களை தேடும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# கலிபோர்னியா காட்டுத்தீயை பேரிடராக அறிவித்த பைடன்

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜன.11

கலிபோர்னியாவில் ஏற்பட்ட பயங்கர காட்டுத்தீயால், ரூ. 4.46 இலட்சம் கோடி முதல் ரூ. 4.89 இலட்சம் கோடி வரையில் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், காட்டுத்தீயை பேரிடராக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஏற்பட்ட காட்டுத்தீயால், பொதுமக்கள் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்புவாசிகள் வேறு இடங்களுக்கு செல்லும்படி உத்தரவிடப்பட்டுள்ளனர்.

காட்டுத்தீயால் புகை மண்டலம் பரவி காணப்படுகிறது. வெப்ப காற்றும் வீசி வருகிறது. இதனால், 30 ஆயிரம் கட்டடங்கள் வரை பாதிப்புக்கு உள்ளாகும் என அஞ்சப்படுகிறது. இதுவரை காட்டுத்தீயில் சிக்கி 5 பேர் உயிரிழந்தனர். இந்த காட்டுத்தீயில் ஹொலிவுட் நடிகர், நடிகைகள் உள்ளிட்ட பிரபலங்கள் பலரின் வீடுகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

லொஸ் ஏஞ்சல்ஸின் பல பகுதிகளிலும் காட்டுத்தீ விரைவாக பரவி வருகிறது. இந்தச் சூழலில், காட்டுத்தீயால் கலிபோர்னியாவில் பேரிடர் ஏற்பட்டுள்ளது என பைடன் அறிவித்துள்ளார்.

காட்டுத்தீயால் பாதிக்கப்பட்ட மாகாணம், பழங்குடியின பகுதிகள் மற்றும் உள்ளூர் பகுதிகளில் மீட்பு முயற்சிகளை மேற்கொள்வதற்கான அரசின் உதவியை வழங்குவதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வார தொடக்கத்திலிருந்து காட்டுத்தீயானது 15 ஆயிரம் ஏக்கர் வனப் பகுதிகள் வரை பரவி வருகிறது. இதுவரை 10 ஆயிரம் ஏக்கர் பகுதிகள் எரிந்து விட்டன. 4. 46 இலட்சம் கோடி ரூபாய் முதல் 4. 89 இலட்சம் கோடி ரூபாய் வரையில் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது என முதல்கட்ட ஆய்வில் மதிப்பிடப்பட்டுள்ளது. (எ)

பிரிட்டன் பெண்களுக்கு

# பாகிஸ்தானியர்கள் பாலியல் தொல்லை

புதுடில்லி,ஜன.11

பிரிட்டன் பெண்களுக்கு அங்குள்ள பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த இளைஞர்கள் கும்பலால்தான் அதிகளவில் பாலியல் தொல்லை ஏற்பட்டு வருவதாக இந்திய மாநிலங்களவை உறுப்பினர் (சிவசேனா எம்.பி) பிரியங்கா சதுர்வேதி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், "பல்வேறு வடக்கு ஆங்கில நகரங்களில் வசித்து வரும் பாகிஸ்தானிய வம்சாவளியைச் சேர்ந்த ஆண்களால் தான் பிரிட்டன் பெண்களுக்கு அதிகளவில் பாலியல் துன்புறுத்தல் அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, கும்பல்களை சீர்படுத்துவதற்கான பழியை ஆசியாவின் மீது சுமத்த முடியாது. பாகிஸ்தான் மீது தான் இதற்கான பழியை சுமத்த வேண்டும்- என்றார்.

பிரியங்கா சதுர்வேதியின் இந்தக் கருத்துக்கு ஸ்பேஸ்எக்ஸ் மற்றும் டெஸ்லா தலைமை நிர்வாக அதிகாரி எலான் மஸ்க் ஆதரவு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் "ஆமாம். உண்மை தான்" என்று கூறியுள்ளார்.(எ)

# "இந்தியா கூட்டணியை கலைக்கலாம்"

புதுடில்லி, ஜன.11

மக்களவைத் தேர்தலுக்காக மட்டுமே இந்தியா கூட்டணி என்றால் அதை கலைத்து விடலாம் என்று காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா தெரிவித்தார்.

மக்களவைத் தேர்தலுக்காக மட்டுமே இந்தியா கூட்டணி அமைக்கப்பட்டதாக ஆர். ஜே. டி. தலைவர் தேஜஸ்வி யாதவ் கூறியிருந்தார்.

இதுகுறித்து செய்தியாளர்களின் கேள்விக்கு உமர் அப்துல்லா பதிலளிக்கையில், "மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு இந்தியா கூட்டணி கூட்டம் நடைபெறவில்லை. டில்லி சட்டப்பேரவை தேர்தலுக்குப் பிறகு ஆம் ஆத்மி, காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணியின் கூட்டம் கூட்டப்பட வேண்டும். மக்களவைத் தேர்த லுக்காக மட்டுமே இந்தியா கூட்டணி என்றால் அதை கலைத்து விடலாம். எதிர்க்கட்சிகள் தனித்தனியே செயல்படலாம். ஆனால், சட்டப்பேரவை தேர்த லுக்கும் இக்கூட்டணி பொருந்தும் என்றால் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இந்தியா கூட்டணியில் முக்கிய தலைமை, முக்கிய கட்சி அல்லது எதிர்கால உத்திக்கான திட்டங்கள் குறித்து எந்தத் தெளிவும் இல்லை. இந்தக் கூட்டணி தொடருமா என்பதிலும் தெளிவில்லை"- என்றார்.

# மியன்மாரில் தாக்குதல் 40 பேர் உயிரிழந்தனர்


யங்கூன், ஜன.11

ஏஏ என்ற கிளர்ச்சிக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள ராம்ரி தீவின் கியாக் நி மா என்ற கிராமத்தின் மீது மியன்மார் இராணுவம் திடீர் தாக்குதல் நடத்தியது. இதில் 40 பேர் உயிரிழந்தனர். 20 பேர் படுகாயமடைந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் ஒருநாள் கிரிக்கெட்

# இந்தியாவுக்கு சவாலான இலக்கு நிர்ணயித்தது அயர்லாந்து அணி



ராஜ்கோட், ஜன.11

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு சவாலான இலக்கு நிர்ணயித்தது அயர்லாந்து அணி. அந்த அணி தரப்பில் அதிகபட்சமாக கேபி லீவிஸ் 92 ஓட்டங்கள் அடித்தார்.

அயர்லாந்து மகளிர் கிரிக்கெட் அணி முதல்முறையாக இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதன்படி, இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் உள்ள சவுராஷ்டிரா கிரிக்கெட் சங்க மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணிக்கு முன்னணி வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர். இருப்பினும், தலைவி கேபி லீவிஸ் - லியா பால் சிறப்பான இணைப்பாட்டம் அமைத்து அணியை நல்ல நிலைக்கு கொண்டு சென்றனர். இருவரும் அரைச்சதம் அடித்து அசத்தினர். லியா பால் 59 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, மறுமுனையில் கேபி லீவிஸ் சதத்தை நெருங்கிய தருவாயில் 92 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில், 50 ஓவர்கள் முடிவில் அயர்லாந்து 7 விக்கெட்கள் இழப்புக்கு 238 ஓட்டங்கள் குவித்தது.

இந்தியா தரப்பில் பிரியா மிஸ்ரா 2 விக்கெட்கள் வீழ்த் தினர். (எ)

## ஆப்கானுடனான போட்டியை புறக்கணிக்க வேண்டும்

இங்கிலாந்து வழியில் தென்னாபிரிக்கா

கேப்டவுன், ஜன.11

அடுத்த மாதம் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண தொடரில் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியுடனான போட்டியை புறக்கணிக்க வேண்டுமென்ற கருத்தை தான் ஆதரிப்பதாக தென்னாபிரிக்க நாட்டின் விளையாட்டுத் துறை அமைச்சர் கெய்டன் மெக்கென்சி தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் தலிபான் ஆட்சியின் கீழ் கல்வி, விளையாட்டு உட்பட பெண்களுக்கான பல வேறு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு வரும் நிலையில், அந்த அணியுடன் ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண தொடரில் விளையாடுவதை இங்கிலாந்து கிரிக்கெட் அணி புறக்கணிக்க வேண்டும் என்று அண்மையில் அந்த நாட்டின் அரசியல் பிரமுகர்கள், இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்கு அழுத்தம் கொடுத்தனர். இந்தச் சூழலில், அதே கருத்தை அமைச்சர் கெய்டன் மெக்கென்சி தற்போது வலியுறுத்தியுள்ளார். (எ)

## அடிலெய்ட் ரென்னிஸ் தொடரின் இறுதிப்போட்டியில் மேடிசன் கீஸ்


அடிலெய்ட், ஜன.11

அடிலெய்ட் சர்வதேச ரென்னிஸ் போட்டி தொடரின் இறுதிப் போட்டிக்கு அமெரிக்காவின் மேடிசன் கீஸ் தகுதி பெற்றுள்ளார்.


அடிலெய்ட் சர்வதேச ரென்னிஸ் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர். இந்த நிலையில், மகளிர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் மேடிசன் கீஸ், ரஷ்யாவின் லியுட்மிலா சாம்சோனோவாவுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் முதல் செட்டை 7 - 5 என்ற புள்ளிக்கணக்கில் லியுட்மிலா சாம்சோனோவாவும், 2ஆவது செட்டை 7 - 5 என்ற புள்ளிக்கணக்கில் மேடிசன் கீஸும் கைப்பற்றினர். தொடர்ந்து நடைபெற்ற 3ஆவது செட்டில் 3 - 0 என்ற புள்ளிக்கணக்கில் மேடிசன் கீஸ் முன்னிலையில் இருந்தார்.

அப்போது, எதிர்பாராதவிதமாக லியுட்மிலா சாம்சோனோவா காயமடைந்தார். இதனால், அவர் போட்டியிலிருந்து வெளியேறினார். இதனால், மேடிசன் கீஸ் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். (எ)



## கம்மின்ஸுக்கு காயம்



சிட்னி, ஜன.11

அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் காயத்தால் அவதிப்பட்டு வருகிறார் என தகவல் வெளியாகியுள்ளது.

9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானில் பெப்ரவரி 19ஆம் திகதி முதல் மார்ச் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கும் 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொடரில் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் பங்கேற்பாரா என கேள்வி எழுந்துள்ளது.

கம்மின்ஸின் கணுக்காலில் காயம் ஏற்பட்டுள்ளது. தற்போது அவரது கணுக்காலில் ஏற்பட்ட காயம் குறித்து தெரிந்து கொள்ள ஸ்கான் செய்யப்படவுள்ளது.

அதற்கு பிறகே சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் விளையாடுவாரா? இல்லையா? என்பது உறுதியாகும். மேலும், அவுஸ்திரேலிய தேர்வுக்குழுத் தலைவரான ஜோர்ஜ் பெய்லியும், பட் கம்மின்ஸ் சம்பியன்ஸ் கிண்ண தொடரில் விளையாடுவாரா என்பதை உறுதிப்படுத்த மறுத்துவிட்டார். (எ)

## 2025இல் தன் முதல் கோலை பதிவு செய்த ரொனால்டோ




ரியாத், ஜன.11

2025ஆம் ஆண்டில் தனது முதல் கோலை பதிவு செய்தார் கிறிஸ்டியானோ ரொனால்டோ. சவுதி அரேபியாவில் உள்ள அல் நசர் கிளப் அணிக்காக விளையாடிய போது இந்த கோலை அவர் பதிவு செய்தார். கிளப் மற்றும் தேசிய அளவில் இது அவரது 917ஆவது கோலாகும்.

போர்த்துக்கல் உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவை கடந்த 2023இல் ரூ. 1,775 கோடிக்கு ஒப்பந்தம் செய்தது அல் நசர் கிளப் அணி. அவர் இந்த ஆண்டு ஜூன் வரையில் அல் நசர் அணியோடு விளையாடும் வகையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சூழலில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ரியாத் நகரில் சவுதி புரோ லீக் தொடரில் அல் ஒக்தூத் அணியுடனான போட்டியில் ரொனால்டோ விளையாடினார். இதில் எதிரணி 8ஆவது நிமிடத்தில் முதல் கோலை பதிவு செய்து முன்னிலை பெற்றது. இருப்பினும், அதற்கான பதில் கோலை அல் நசர் அணி வீரர் சாடியோ மானே 29ஆவது நிமிடத்தில் பதிவு செய்தார்.

தொடர்ந்து 42ஆவது நிமிடத்தில் அல் நசருக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி கோல் பதிவு செய்தார் ரொனால்டோ. இதன் மூலம் 3-1 என்ற கோல் கணக்கில் அல் நசர் வெற்றி பெற்றது. இதன் மூலம் தனித்துவ வரலாற்று சாதனையை ரொனால்டோ படைத்தார். கடந்த 2002ஆம் ஆண்டு முதல் தொழில் முறை உதைபந்தாட்ட களத்தில் தொடர்ச்சியாக 24 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் கோல் பதிவு செய்து அசத்தியுள்ளார். கடந்த 2024ஆம் ஆண்டில் மட்டும் கிளப் மற்றும் தேசிய அணிக்காக விளையாடி 43 கோல்களை பதிவு செய்திருந்தார். அதற்கு முந்தைய ஆண்டில் 54 கோல்களை பதிவு செய்திருந்தார். (எ)

## "தேசிய மொழியல்ல இந்தி"

சென்னை, ஜன.11

இந்தி, இந்தியாவின் தேசிய மொழி அல்ல என இந்திய கிரிக்கெட் அணியின் முன் னாள் வீரர் ரவிச் சந்திரன் அஸ்வின் தெரிவித்துள்ளார். சென்னையில் ஒரு தனியார் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவர்கள் மத்தியில் அவர் பேசியபோது இவ்வாறு கூறினார்.




"இந்தி நம் தேசிய மொழி அல்ல. அது நமது அலுவல் மொழி. இதை இங்கு சொல்ல நினைத்தேன். நான் இந்திய அணியின் தலைவராக வரமுடியாமல் போனதற்கு பொறியியல்துறை ஒரு காரணம் என சொல்வேன். என் னிடம் யாராவது வந்து உன்னால் முடியாது என்றால் நான் எழுந்து விடுவேன். அதுவே முடியும் என்று சொன்னால் தூங்கி விடுவேன்"- என்றார்.(எ)

# அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் மெல்பேர்னில் நாளை ஆரம்பம்

மெல்பேர்ன், ஜன.11

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸில் ஜோகோவிச் தனது முதல் சுற்று ஆட்டத்தில் அமெரிக்க வீரர் நிஷேஷ் பசவாரெட்டியை எதிர்கொள்கிறார்.

"கிராண்ட்ஸ்லாம்" என்ற உயரிய அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டி மெல்பேர்னில் நாளை 12ஆம் திகதி தொடங்கி 26ஆம் திகதி வரை நடைபெறுகிறது. தற்போது, இந்தத் தொடருக்கான தகுதி சுற்று ஆட்டங்கள் நடந்து வருகிறது.

இதன்படி, ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியனான ஜன்னிக் சின்னெர் (இத்தாலி) முதல் சுற்றில் தரவரிசையில் 34ஆவது இடம் வகிக்கும் சிலி வீரர் நிகோலஸ் ஜாரியை சந்திக்கிறார். 10 முறை சம்பியனும், உலக தரவரிசையில் 7ஆவது இடத்தில் இருப்பவருமான நோவக் ஜோகோவிச் (செர்பியா) தனது முதலாவது ஆட்டத்தில் 133ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் நிஷேஷ் பசவாரெட்டியை எதிர்கொள்ளவுள்ளார்.

உலகின் 3ஆம் நிலை வீரரான கார்லஸ் அல்காரஸ், கஜகஸ்தானின் அலெக்சாண்டர் ஷெவ்செங்கோவுடனும், 2ஆம் நிலை வீரரான அலெக்சாண்டர் பிரான்ஸின் லூகாஸ் பொய்லியுடனும் மோதவுள்ளனர். இதே போன்று தரவரிசையில் 4ஆவது இடத்தில் உள்ள அமெரிக்க வீரர் டெய்லர் பிரிட்ஸ், சக நாட்டை சேர்ந்த ஜென்சன் புரூக்ஸ்பியையும், 6ஆம் நிலை வீரரான நோர்வேயின் கேஸ்பர் ரூட், ஸ்பெயினின் ஜாமி முனாரையும் சந்திக்க உள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகலிட...

மனித உரிமையை மீறியது என தெரிவித்துள்ள ஐ.நா. மனித உரிமை குழு ஏனைய நாடுகள் இந்த முறையை பின்பற்றுவது குறித்து எச்சரித்துள்ளது.

நவ்றுவில் 25 அகதிகள் மற்றும் புகலிடக்கோரிக்கையாளர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்தமை குறித்த தனது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு தீர்ப்புகளிலேயே ஐ.நாவின் மனித உரிமை குழு இதனை தெரிவித் துள்ளது.

புகலிடக் கோரிக்கை குறித்து தீர்மானிக்கும் பொறுப்பை இன்னுமொரு தரப்பிடம் வழங்கும்போது அரசாங்கம் தனது மனித உரிமை கடப்பாடுகளில் இருந்து விடுபடமுடியாது என ஐ.நாவின் குழு தெரிவித்துள்ளது.

ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் அறிமுகப்படுத்திய மிகவும் கடுமையான கொள்கையின் மூலம் ஆஸ்திரேலியா படகுகள் மூலம் தனது நாட்டை வந்தடைய முயன்றவர்களை பப்புவா நியுகினியின் மனஸ்தீவு மற்றும் நவ்று தீவு ஆகியவற்றில் உள்ள தடுப்பு முகாம்களுக்கு அனுப்பியது.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 18 சுயாதீன நிபுணர்கள் அடங்கிய ஐ.நா குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தனர். ஆஸ்திரேலியா சர்வதேச உடன்படிக்கைகளின் கீழ் தங்கள் உரிமைகளை மீறிவிட்டது- குறிப்பாக தடுத்து வைத்திருந்ததன் மூலம் என அவர்கள் தங்கள் முறைப்பாட்டில் தெரிவித்திருந்தனர். (அ)

## யாழில்...

இருந்த 50 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் அப்பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமெராக்களின் உதவியுடன் வழிப்பறி கொள்ளையர்களை அடையாளம் கண்டுள்ள நிலையில் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## ரோஹிங்கியா...

தொடங்கியுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இந்த மனித கடத்தலில் இலங்கையர் ஒருவரும் ஈடுபட்டுள்ளார் என நம்பப்படுகிறது. அதைக் கண்டறிய இப்போது விசாரணை நடந்து வருவதாக அவர் கூறினார்.

பிராந்தியத்தின் பிற இடங்களில் உள்ள ரோகிங்கியா முகாம்களில் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களை புலனாய்வு அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இது இலங்கையை வருகைக்கான இடமாக விளம்பரப்படுத்துகிறது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

மியன்மாரைச் சேர்ந்த நாடற்ற அகதிகளான ரோகிங்கியாக்கள் புத்தாண்டின் முதல் ஐந்து நாட்களில் இப்பகுதியில் பாதுகாப்பு தேடியதாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு, கடலில் ஆறு பேரை இழந்த 115 ரோஹிங்கியாக்களுடன் வந்த படகு இலங்கையின் முல்லைத்தீவு கடற்படப்பில் கரையொதுங்கியது.

மேலும், பிராந்தியத்தில் உள்ள ஜனவரி மூன்றாம் திகதி 196 பேருடனும் மலேசியாவிலும், ஜனவரி ஐந்தாம் திகதி 264 பேருடன் இந்தோனேசியாவிலும் இதுவரை மொத்தம் 460 ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் படகு மூலம் சென்றுள்ளனர்.

"உயிர்களைக் காப்பாற்றுவதே முதல் முன்னுரிமையாக இருக்க வேண்டும்," என்று அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் ஆசியா மற்றும் பசிபிக் பிராந்திய பணியகத்தின் இயக்குநர் ஹை கியுங் ஜூன் கூறினார். (அ)

## என்னை கட்சியிலிருந்து...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்சியின் யாப்பே அதன் முதுகெலும்பு. அதன் கொள்கைகள் அது பயணிக்கும் வழித்தடம். அந்த அடிப்படையில் ஒரு கட்சியை நிர்மூலமாக்குவதற்கு யாப்பை மீறிச் செயற்பட்டால் அதனை முடக்கலாம். இன்று எமக்கான சந்தேகம் இதுவே.

திருமலையில் கட்சி மீது தொடரப்பட்ட வழக்கின் மூலம் எமது பொதுச் சபை முடக்கப்பட்டுள்ளது. அப்போது இனிமேல் யாப்பு மீறல் செய்யமாட்டோம் என்று பேசப்பட்டது. ஆனால் மீண்டும் அதே யாப்பு மீறலை மத்திய செயற்குழு செய்கிறது என்றால் இதன் நோக்கம் என்ன?.

இந்த பொதுக்குழுவுக்கு எதிராக நீதிமன்ற வழக்குகளை நடத்தியவர்கள் யார் என்பது கண்டுபிடிக்கப்படவேண்டிய விடயம். மத்திய குழுவை அரசியல் மாபியாக்களின் கூடாரமாக மாற்றக்கூடாது.

கடந்த ஒரு மத்திய குழுக் கூட்டத்தில் மாவை சேனாதிராசாவை கதிரையில் இருக்க வேண்டாம். உங்கள் ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று சொன்ன நபர் மத்திய குழுவிலேயே இல்லாத ஒருவர். நிலைமை அவ்வாறே உள்ளது.

இதேவேளை பதில் செயலாளர் என்ற போர்வையில் ஒருவர் இருந்துகொண்டு யாப்பை மீறிச் செயற்பட்டமையாலேயே இந்த நிலமை ஏற்பட்டுள்ளது.

இவர்களுக்கு தில் இருந்தால் அந்த வழக்கை மீளப்பெற்று பொதுச்சபை இயங்குவதற்கு இடம் தரவேண்டும். அதைச் செய்தாலே மாபியாக்களிடம் இருந்து தமிழரசுக் கட்சியை மீட்க முடியும்.

கட்சியின் பொதுக்குழு கூடும்போது தேசியப் பட்டியலை நாங்கள் மீள் பரிசீலனை செய்வோம். கட்சியை மீட்பதற்காக மாத்திரமே நான் போராடுகிறேன். மத்திய குழு உறுப்பினரை நீக்கும் அதிகாரம் மத்திய செயற்குழுவுக்கு இல்லை என்று கட்சி யாப்பின் விதி 7 கூறுகிறது. அந்த அதிகாரம் பொதுச் சபைக்கே இருக்கிறது.

கடந்த கூட்டத்தை விட்டு நான் வெளியேறிய பின்னர் என் மீது குற்றத்தை முன்வைத்து என்னை இடைநிறுத்தியதாக அவர்கள் பிரசாரம் செய்தார்கள். என்னை நீக்குவதற்கான அதிகாரம் பொதுச் சபைக்கே இருக்கிறது.

எனவே என்னை நீக்கியமை தொடர்பான உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தி 72 மணித்தியாலங்களில் பதில் அளிக்குமாறு கோரி பதில் செயலாளருக்கு நான் கடிதம் அனுப்பியிருந்தேன்.

அதன் பிரதிகள் தலைவர் மாவை சேனாதிராசா, பதில் தலைவர் சிவஞானம், தெரிவு செய்யப்பட்ட தலைவர் சிறிதரன் ஆகியோருக்கும் அனுப்பியிருக்கிறேன். வெறுமனே வாய்ச் சவடால்களால் கட்சியின் பதவிகளை பறிக்க முடியாது. அதற்கென்று ஒழுங்குமுறை உள்ளது. -என்றார். (அ)

## வடக்கு அரிசி ஆலை...

அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு நெல் கொள்வனவுக்கு கடன் வழங்குவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதாநாயகனுக்கும், வங்கிகளுக்கும் இடையிலான சந்திப்பு வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் இடம்பெற்றது.

நெல் கொள்வனவு செய்வதற்கு போதிய களஞ்சிய வசதிகள் இருந்த போதும் அதற்குரிய கடன் வசதிகளை வங்கிகள் வழங்கவில்லை என அரிசி ஆலை உரிமையாளர்களுடனான கலந்துரையாடலில் தெரிவித்ததாகக் குறிப்பிட்ட ஆளுநர், எங்களுடைய மாகாணத்தில் விளையும் நெல் வேறு மாகாணங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு அதிகரித்த விலையில் மீண்டும் எமது மாகாணத்துக்கு கொண்டு வரப்படுகின்றமையை தவிர்ப்பதற்காக எமது அரிசி ஆலை உரிமையாளர்க ளுக்கு அதற்குரிய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என கோரினார்.

மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடான நெல் கொள்வனவுக்குரிய நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன் குறிப்பிட்டார்.

இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய அலுவலக முகாமையாளர், ஏனைய அரச மற்றும் தனியார் வங்கிகளின் முகாமையாள்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போது, கடந்த காலங்களிலும் கடன்கள் வழங்கப்பட்டதாகவும் இம்முறையும் கடன் வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

குறைந்த வட்டி வீதத்தில் நெல் கொள்வனவுக்காக வழங்கப்படும் கடன் எல்லையை உயர்த்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோது அது நிதியமைச்சின் கொள்கைத் தீர்மானம் எனவும் வங்கி முகாமையாளர்கள் சுட்டிக் காட்டினர். இலங்கை முழுவதும் ஒரே நடைமுறையே பின்பற்றப்படுவதாகவும் குறிப்பிட்டனர். இருப்பினும் வடக்கிலுள்ள விவசாயிகளின் நெல்லை இங்குள்ள அரிசி ஆலை உரிமையாளர்களே கொள்வனவு செய்வதை ஊக்குவிக்கும் வகையில் செயற்படுமாறு ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கினார்.

இதேவேளை, அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் தொடர்பான விவரங்கள் மற்றும் நெல் கொள்வனவு விவரங்களை வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலருடன் பகிர்ந்து கொள்ளுமாறும் ஆளுநர் ஆலோசனை வழங்கினார். இதன் ஊடாக சில விடயங்களைக் கண்காணித் துக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும், நெல் கொள்வனவுக்கு சங்கங்களுக்கு பணம் வழங்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பான கண்காணிப்புக்களை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண கூட்டுறவு திணைக்கள ஆணையாளர் ந.திருலிங்கநாதன், ஒவ்வொரு மாவட்டத்தினதும் கூட்டுறவு திணைக்கள உதவி ஆணையாளர்களுக்கு அறிவுத்தல் வழங்கினார். அத்துடன், நெல்லை மத்திய கொள்வனவு நிலையம் ஊடாக கொள்வனவு செய்து அதனை கட்டுப்பாட்டு விலையில் அரிசியாக்கி விற்பனை செய்வது தொடர்பில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் முகாமையாளர்கள் மற்றும் தலைவர்களுடன் கலந்துரையாடுமாறும் பணித்தார்.

இதேவேளை நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட நெல் விதைப்பின் ஊடாக அதிக விளைச்சல் கிடைத்துள்ளதாக வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சு.செந்தில்குமரன் சுட்டிக் காட்டினார். இது தொடர்பில் ஏனைய விவசாயிகளுக்கும் தெரியப்படுத்துமாறு ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலர் பொ.வாகீசன், வடக்கு மாகாண கூட்டுறவு திணைக்கள ஆணையாளர் ந. திருலிங்கநாதன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சு.செந்தில் குமரன், இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் திருமதி பகீரதி செந்தில்மாறன், அரச மற்றும் தனியார் வங்கிகளின் முகாமையாளர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (அ)

## நாட்டில்...

சுகாதாரப் பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

அதன்படி, கர்ப்பிணிப் பெண்கள் காய்ச்சல் இருக்கலாம் என சந்தேகிக்கும் பட்சத்தில் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறவேண்டும் என ஆலோசகர் தொற்றுநோயியல் நிபுணர் சிந்தன பெரேரா தெரிவித்தார்.

அத்துடன், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள், 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் மற்றும் நீரிழிவு அல்லது புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களை இந்த காய்ச்சல் பாதிக்கக்கூடும்.

கைகளை சுத்தமாக வைத்திருப்பதுடன் முகம் அல்லது வாயைத் தொடுவதைத் தவிர்ப்பது மற்றும் பொதுவான தனிப்பட்ட சுகாதாரத்தைப் பேணுவது மூலம் காய்ச்சல் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் சிந்தன பெரேரா குறிப்பிட்டார். (அ)

## தேசிய...

எம்.பி பதவி வழங்கப்படாத கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் எதிர்க் கட்சியின் பிரதான அரசியல் கட்சி அலுவலகத்துக்கு சென்று ரவுடித்தனமாக நடந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தொழிலதிபர் தான் கொடுத்த 50 கோடி ரூபாயை திருப்பித் தருமாறு கோரியுள்ளதாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவிக்கையில்-

தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவி வழங்குவதாகக் கூறி எமது கட்சிக்கு இதுவரை பணம் பெறவில்லை-என்றார்.

இது தொடர்பில் பொதுஜன பெரமுனவிடம் வினவிய போது, தமது கட்சியும் இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாக, அதன் நிர்வாகச் செயலாளர் ரேணுகா பெரேரா தெரிவித்தார். (அ)

## தமிழாராய்ச்சி...

மாநாட்டின்போது ஏற்பட்ட அசம்பாவிதத்தில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருந்தனர். இதன்போது, கூடியிருந்த மக்கள் மத்தியில் மின் கம்பி அறுந்து விழுந்ததில் 11 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அன்றைய தினம் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபத்தின் முன்பாக அமைக்கப்பட்டுள்ள நினைவு

தூபியில் நேற்று நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச் சுடர் ஏற்றி வைத்ததை தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில், வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் க.சர்வேஸ்வரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரான எஸ்.சுகிர்தன், யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் முதல்வர் இம்மானுவல் ஆனோல்ட், இலங்கை தமிழரசுக் கட்சியின் நிர்வாக செயலாளர் எஸ்.குலநாயகம், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் தலைமையிலும் உலகத் தமிழராய்சசி மாநாட்டு படுகொலை நினைவுத் தூபியில் நினைவேந்தல் இடம்பெற்றது.

புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் இயக்குநர் ஜோதிலிங்கம், சமயப் பெரியார்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## புலமைப்பரிசில் பெறுபேறு பெப்.12ஆம் திகதிக்கு முன்!

கொழும்பு, ஜன. 11

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதிக்கும் 12 ஆம் திகதிக்கும் இடையில் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணி கடந்த புதன்கிழமை 64 நிலையங்களில் தொடங்கியது.

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை செப்ரெம்பர் 15 ஆம் திகதி நடைபெற்றது.

சிங்கள மொழி மூலம் 244,092 பேரும் தமிழ் மொழி மூலம் 79,787 பேரும் உட்பட மொத்தம் 323,879 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். (அ)

இந்திய மீனவர் கைது விவகாரம்

## ஜெய்சங்கருக்கு மீண்டும் கடிதம் எழுதிய ஸ்டாலின்!

சென்னை, ஜன. 11

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தற்சமயம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மீனவர்களைச் சுட்டிக்காட்டி இந்த கடிதத்தை அவர் எழுதியுள்ளார்.

மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்கு மீன்பிடித் தொழிலை மட்டுமே பெரிதும் நம்பியுள்ளதாகவும் அவர்களை, இலங்கைக் கடற்படையினர் சிறைப் பிடிப்பதால், அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் குறித்த கடிதத்தில் ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார்.

உரிய இராஜதந்திர வழிமுறைகளை முன்னெடுத்து, அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரைக் கேட்டுக்கொண்டார்.

## உதயங்க வீரதுங்க கைது!

கொழும்பு, ஜன. 11

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க மிரிஹான பொலிஸாரால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

அயல் வீட்டில் வசிக்கும் நபரொருவரை தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட்டார்.

உதயங்க வீரதுங்கவை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## கல்வி அமைச்சுக்கு உரிய 140 கார்களைக் காணோம்!

கொழும்பு, ஜன. 11

கல்வி அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 140 கார்கள் தற்போது அமைச்சில் இல்லை என தேசிய கணக்காய்வு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

கல்வி அமைச்சு தொடர்பாக சமீபத்தில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சொத்து மேலாண்மை தணிக்கை அவதானிப்புகளின் கீழ் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணாமல்போன 140 வாகனங்கள் தொடர்பான தகவல்களை தற்போது கண்டுபிடிக்க முடியாததால், இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கல்வி அமைச்சின் தலைமை கணக்கியல் அதிகாரி கணக்காய்வு அலுவலகத்துக்கு பதிலளித்துள்ளார்.

இந்த வாகனங்களை சரியாக அடையாளம் காண வேண்டும், நடவடிக்கை எடுக்கவேண்டும் மற்றும் உள் கட்டுப்பாட்டு அமைப்பை நிறுவவேண்டும் என்று தணிக்கை அலுவலகம் கல்வி அமைச்சுக்கு பரிந்துரைத்துள்ளது. (அ)

# சபாநாயகருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை

### எதிர்க்கட்சி எம்.பிக்கள் திட்டம்

கொழும்பு, ஜன. 11

**சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன, பாராளுமன்ற மரபை மதிக்காத காரணத்தினால் எதிர்காலத்தில் அவருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிக்கள் குழு தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

பாராளுமன்றம் மற்றும் பாராளுமன்றக் குழுக்களின் ஆசனங்களை அமைப்பதில் பாரிய சிக்கல்கள் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் குழு சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்னவுடன் கலந்துரையாடியுள்ளது.

எவ்வாறாயினும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் எழுப்பிய பிரச்னைகள் தொடர்பில் சபாநாயகர் கவனத்தில் கொள்ளவில்லை எனவும் அதனால் தான் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீண்டும் இடம்பெற்ற தெரிவுக் குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் குழுவினர் இது தொடர்பில் கேள்வி எழுப்பியதாகவும், அங்கு எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பில் சபாநாயகர் கவனம் செலுத்தவில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பீ. பெரேரா தெரிவித்தார்.

எனவே, பாராளுமன்ற பாரம்பரியத்தை பாதுகாக்கக் கடும் நடவடிக்கை எடுக்க எதிர்க்கட்சி எம்.பிக்கள் குழு முடிவு செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (அ)

# உயர்நீதிமன்ற நீதியரசர்கள் நியமனம் வெளிப்படைத்தன்மை, தகுதி முக்கியம்

### இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு கடிதம்

கொழும்பு, ஜன. 11

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், உயர்நீதிமன்ற நீதியரசர்கள் நியமனம் தொடர்பான தமது எதிர்நிலைப்பாடு மற்றும் பரிந்துரைகளை எடுத்துரைத்து, ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அத்தகைய நியமனங்களில் வெளிப்படைத்தன்மை, தகுதி மற்றும் சட்ட மற்றும் நெறிமுறை தரநிலைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

2025, ஜனவரி 8ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ள இந்த கடிதத்தில், குடிமக்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதிலும் சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வதிலும் நீதித்துறையின் முக்கிய பங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

நீதித்துறை அமைப்பில் பொது மக்களின் நம்பிக்கையைப் பேணுவதற்கு, நீதியரசர்களை நியமிக்கும் செயன்முறை மூப்பு, தகுதி மற்றும் தகுதியின் அடிப்படையில் அது அமைய வேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தில் தற்போது நான்கு வெற்றிடங்கள் உள்ளன. இந்நிலையில், குறித்த நியமனங்களின்போது, நேர்மை, சுதந்திரம் மற்றும் திறனை பிரதிபலிக்கும் வகையில் அளவுகோல்களைப் பின்பற்றுமாறு, சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. (அ)

# தமிழாராய்ச்சி மாநாட்டின்போது உயிரிழந்த உறவுகளுக்கு சிறிதரன் சபையில் இரங்கல்!

கொழும்பு, ஜன. 11

யாழ்ப்பாணத்தில் 51 வருடங்களுக்கு முன்னர் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றபோது 9 பேர் மரணமடைந்த உறவுகளை நினைவு கூர்ந்ததுடன் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆறுதல் தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# 'கிளீன் சிறிலங்கா' அங்குரார்ப்பண நிகழ்வுக்கு 9 லட்சம் மட்டுமே செலவு!

### சபையில் நளிந்த ஜயதிஸ்ஸ வெளிப்படை

கொழும்பு, ஜன. 11

கிளின் சிறிலங்கா வேலைத்திட்டத்திற்கு 70 லட்சம் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளதாக போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிளின் சிறிலங்கா தேசிய வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வுக்கு 70 லட்சம் ரூபா செலவளிக்கப்படவில்லை.

குறித்த சங்கீதவியலாளருக்கோ அல்லது பாடலாசிரியருக்கோ கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் தொகை பொய்யானது.

அதாவது குறித்த கொடுப்பனவு கூட இதுவரை கொடுக்கப்படவில்லை.

கிளின் சிறிலங்கா வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் மதிப்பீடுகள் அதிகம் என்றபடியினால் நாம் அவற்றை பெற்றுக்கொள்ளவில்லை.

அங்குரார்ப்பண நிகழ்வுக்கு 9 லட்சத்தை விட ஒரு சதமேனும் மேலதிகமாக செலவழிக்கவில்லை- என்றார். (அ)

# தமிழக முதல்வரை சந்திக்கவுள்ளார் பிரதியமைச்சர் பிரதீப் சுந்தரலிங்கம்

சென்னை, ஜன. 11

உலக அயலகத் தமிழர் தினம் இன்றும் நாளையும் சென்னை மாநகரத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுவதற்காக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நேற்றுமுன்தினம் இந்தியா நோக்கி பயணமானார்.

மேற்படி விஜயத்தின்போது தமிழக முதலமைச்சர் மு.கா. ஸ்டாலின் மற்றும் தமிழக சட்ட சபை உறுப்பினர்கள், இலங்கை மலையக மக்கள் குறித்த நலன் விரும்பிகள் ஆகியோரை சந்தித்து இலங்கை வாழ் மலையக மக்களின் பிரச்னைகள், மலையக மக்களின் அபிவிருத்தி சமூக மேம்பாடு சம்பந்தமாக அவர் கலந்துரையாடவுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினால் 11.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.